மின்னிதழ்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

2024 செப்டெம்பர் 21 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 226 | Saturday 21, September, 2024 | 11 பக்கங்கள் | 50/-

## வாக்காளர் அட்டை இன்றியும் இன்று வாக்களிக்க முடியும்

லோரன்ஸ் செல்வநாயகம்



உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் இதுவரையில் கிடைக்காதவர்கள் வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்க முடியுமென, தேர்தல்கள் ஆணைக்குழுவின் 06



# ஜனாதிபதி தேர்தல் இன்று

## காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை வாக்களிப்பு

### சுதந்திரமான, அமைதியான தேர்தலை உறுதி செய்ய விசேட பாதுகாப்பு ஏற்பாடு

- 13,421 வாக்களிப்பு நிலையங்கள்
- தேர்தல் கடமைகளில் 150,000 அரச அதிகாரிகள்
- 38 வேட்பாளர்கள், 1, கோடியே 7,140,354 பேர் வாக்களிக்க தகுதி

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு இன்று நடைபெறுகிறது. அதற்கிணங்க இன்று காலை 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை வாக்களிப்பு நடைபெறும்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறுவதுடன், தேர்தல் கடமைகளை மேற்கொள்வதற்காக 06

# 2022இல் வங்குரோத்து அடைந்த இலங்கை இரண்டரை வருட குறுகிய காலத்துக்குள் மீட்சி

## பொருளாதார ரீதியாக வீழ்ச்சியுற்ற நாடுகளை மீட்பதற்கான முன்மாதிரி

2022ஆம் ஆண்டு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கையானது இரண்டரை வருடங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் கடனை மறுசீரமைத்து இன்று வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டிருப்பது, பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாடுகளை மீட்பதற்கான முன்மாதிரியாகக் கொள்ள வேண்டுமென நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க தெரிவித்துள்ளார்.

84 பில்லியன் அமெரிக்க டொலர் என்ற பாரிய கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக அரசாங்கத்தால் இதுவரை மூன்று வழிமுறைகளில் கடனை மறுசீரமைக்க முடிந்துள்ளது.

இதன்படி இலங்கை 17.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைத்து சலுகைகளை பெற்றுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



நாட்டை யார் நிர்வகித்தாலும் இலங்கை மீண்டும் ஒரு பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்துவிடக் கூடாது என்பதற்காக அரசாங்கம் ஐந்து சட்டங்களையும் நிறைவேற்றியிருப்பதாகவும் முன்னாள் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்துள்ளார்.

இஷ்டம்போல் பணம் அச்சிடுவதை தடுக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அரசியல் தேவைகளுக்காக மக்களின் பணத்தை தன்னிச்சையாக செலவிடுவதை தடுக்கும் வகையில் அரச நிதி பொறுப்பு முகாமைத்துவ சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரச கடன் முகாமைத்துவ சட்டம் கடன் வசதிகளை பெறுவதில் கடுமையான ஒழுக்கத்தை கையாள்வதற்கான வழிகாட்டுதல்களை கொண்டு வந்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொருளாதார மாற்று சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழல் மற்றும் இலஞ்சத்தை தடுக்க தேசிய ஊழல் தடுப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஐந்து முக்கிய சட்டங்கள், பிற சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்டமை கடந்த இரண்டு வருட நிர்வாகத்தில் நடந்த மிக முக்கிய நிகழ்வென்றும் முன்னாள் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விவகாரம்

# 3 பேர் பணி நிறுத்தம்; விடைத்தாள் திருத்த பணிகளும் இடைநிறுத்தம்

லோரன்ஸ் செல்வநாயகம்



### அவசியமெனில் பரீட்சையை மீண்டும் நடத்த நடவடிக்கை -கல்வி அமைச்சின் செயலாளர்

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் போது வினாத்தாள் கசிந்துள்ளதாக விசாரணையில் தெரியவருமானால், அப்பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென, கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்தார்.

அதுவரை 2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன் வினாத்தாள்களை பரீட்சைக்கு முன்பே கசிய விட்டதாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் விசாரணையை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர், விசாரணை நிறைவு பெற்றதும் அதனை கவனத்தில் கொண்டு அப்பரீட்சையை மீண்டும் நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும், அவர் தெரிவித்தார். நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அநுராதபுரம், ரத்மலே திஸ்ஸ கல்லூரி பரீட்சை மண்டபத்தில் சேவையில் 06

## தனியார் பிணைமுறி உரிமையாளர்களுடனான பேச்சுவார்த்தை வெற்றி



தனியார் பிணைமுறி உரி மை யாளர்களுடனான பேச்சுவார்த்தை நிறைவடைந்துள்ளதோடு, நாட்டை வங்குரோத்து நி லையிலிருந்து விடுவிப்பது தொடர்பான அனைத்து பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக நிறைவடைந்து ள்ளதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டமை தொடர்பான உத்தியோகபூர்வ 06

"நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டதாக விரைவில் உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்கும். அனைவரது ஆதரவுடன் நாட்டை கட்டியெழுப்புவதற்கான பொருளாதார திட்டங்கள் செயற்படுத்தப்படும்" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

அசம்பாவிதங்கள் ஏற்படுமாயின்

# வாக்களிப்பு நிலையங்களின் வாக்குகள் சூனியமாக்கப்படும்



### தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பின் போது அசம்பாவிதம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படுமென, தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பின் போது ஏதேனுமொரு வாக்களிப்பு நிலையத்திலோ அல்லது 06

# பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

### www.ugc.ac.lk இல் மேலதிக விபரங்களை பெறலாம்



2023ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு நேற்று வெளியிட்டது.

2023ஆம் ஆண்டு 269,613 மாணவர்கள் உயர்தர பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 173,444 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை தகைமைகளை பெற்றுள்ளனர். 06

# தேர்தல் பணிகளிலிருந்து 9 அரச அதிகாரிகள் நீக்கம்

ஜனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டதாக கூறப்படும் 9 அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக, ஹம்பாந்தோட்டை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எம்.பி.சுமணசேகர தெரிவித்தார்.

9 அதிபர்கள், ஒரு பிரதி அதிபர், 4 ஆசிரியர்கள், ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர், சமுர்த்தி முகாமையாளர், 3 வைத்தியர்கள் உட்பட 19 அரச அதிகாரிகள் ஜனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவிப்பதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் சர்ச்சை தீர்வு நிலையத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

இதற்கமைய தீவிர விசாரணையின் போது 19 அதிகாரிகளில் 9 பேர் தேர்தல் கடமைகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். தேர்தல் கடமையிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டுள்ளதால் அந்தந்த வெற்றிடங்களுக்கு தற்போது வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.



03 பெரும்போக விவசாயிகளுக்கு **இலவசமாக 55,000 மெ.தொன் உரம்; உலக உணவு திட்டத்துடன் ஒப்பந்தம்**



03 **ரோயல் கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் ஜனாதிபதி ரணில் இன்று வாக்களிப்பார்** சஜித் இராஜகிரியவிலும் அநுர பஞ்சிகாவத்தையிலும் வாக்களிப்பர்



03 தனியார் நிறுவன ஊழியர்களுடன் **பெருந்தோட்ட தொழிலாளருக்கும் வாக்களிக்க விடுமுறை வழங்குங்கள்**

# முதலாவது தேர்தல் முடிவு இன்று இரவு 11 மணிக்குள் வெளியாகும்

### தேர்தல்கள் ஆணைக்குழு நம்பிக்கை




ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலினது வாக்களிப்பின் முதலாவது முடிவை இன்று (21) இரவு 11.00 மணிக்குள் வெளியிடக்கூடியதாக இருக்குமென, தேர்தல்கள் ஆணைக்குழு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பின் 06

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலை செப். 24ஆம் திகதி மீள திறப்பு

### விடுதிகளுக்கு 23 இல் மாணவர்கள் செல்லலாம்



தற்காலிகமாக மூடப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமானது எதிர்வரும் 24ஆம் திகதி முதல் அனைத்து பீடங்களிலும் கற்கைகளை 06

லெபனானில் தொடர் வெடிப்புகள்

# தொடர்பு சாதன பயன்பாட்டை தவிர்க்க இலங்கையருக்கு அறிவுறுத்து

ஹிஸ்புல்லா போராளிகளுக்கு எதிராக இந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பேஜர் மற்றும் வோக்கிடோக்கிகள் மூலமான குண்டு தாக்குதல் சம்பவங்களை அடுத்து லெபனானில் எழுந்துள்ள அவசர நிலைக்கு மத்தியில் அங்கு வசிக்கும் இலங்கையரின் பாதுகாப்பு தொடர்பில் லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகம் எச்சரித்துள்ளது. இந்த குண்டு வெடிப்பு சம்பவங்களால் ஹிஸ்புல்லா அமைப்பை சேர்ந்த பலர் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இலங்கை தூதரகம் விடுத்துள்ள எச்சரிக்கை அறிவிப்பில், "கூட்ட நெரிசலான இடங்கள், 06

# ஜம்மியத்துல் உலமா சபை தொடர்பில் போலி செய்தி

### பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை ஓர் அரசியல் நிலைப்பாட்டில் இருப்பதாக தெரிவித்து அச்சபையின் இலச்சினை, அதன் சமூக வலைத்தள பக்கத்தில் பகிரப்படுவது போன்றதொரு புகைப்படம் பகிரப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

சர்வதேச செய்திகள்

## டாக்கா பல்கலை மோதலில் மாணவர் ஒருவர் உயிரிழப்பு



பங்களாதேஷ் தலைநகரிலுள்ள டாக்கா பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் மாணவர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த மாணவர் ஒரு சில தினங்களுக்கு முன்னர் அந்தப் பல்கலைக் கழகத்தின் விரிவுரை மண்டபத்தில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பில் சந்தேகத்தில் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட ஒரு மாணவர் டாக்கா பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் மாணவர் சங்க பிரதிச் செயலாளர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. கைது செய்யப்பட்டிருப்பது டாக்கா பல்கலைக்கழக விடுதியில் தங்கி இருந்த மாணவர்களாவர். கொல்லப்பட்ட மாணவர் திருடன் என்ற சந்தேகத்தல் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எவ்வாறியினும் டாக்கா பல்கலைக் கழக வளாகத்தில் அரசியல் செயற்பாடுகளை தடை செய்யும்படி அந்தப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஆர்ப்பட்டம் இடம்பெற்றதோடு, பல்கலைக்கழகத்தில் அரசியலுக்கு தொடர்புடைய மாணவர்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கும் மாணவர் கொலைக்கும் இடையே தொடர்பு இருப்பதா என்பது தொடர்பில் பொலிஸாரினால் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## பங்களாதேஷ் ஆர்ப்பாட்டக் காலப்பகுதியில் சிறுபான்மையினர் மீது 2,010 தாக்குதல்கள்

### வன்முறைகளில் ஒன்பது சிறுபான்மையினர் பலி

பங்களாதேஷில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வெடித்த கடந்த ஓகஸ்ட் 4 தொடக்கம் 20 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நாடு முழுவதும் சிறுபான்மையினருக்கு எதிராக குறைந்தது 2,010 சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக பங்களாதேஷ் மதங்களுக்கு இடையிலான இந்து பௌத்த கிறிஸ்தவ ஒய்கியா பரிஷாத் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த வன்முறைகளில் குறைந்தது ஒன்பது சிறுபான்மையினர் கொல்லப்பட்டிருப்பதோடு நான்கு சிறுபான்மையின பெண்கள் கற்பழிக்கப்பட்டிருப்பதாக பரிஷாத் அமைப்பு டாக்காவில் நேற்று முன்தினம் (19) நடத்திய செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளது.

இந்த அமைப்பு நாடு முழுவதும் உள்ள தமது உள்ளூர் பிரதிநிதிகள் மூலம் தரவுகளைச் சேகரித்ததாக பரிஷாத் அமைப்பின் மூன்று தலைவர்களில் ஒருவரான நிர்மால் ரொசாரியோ தெரிவித்தார். இந்தத் தரவுகள் ஆறு உறுப்பினர்கள் கொண்ட மத்திய குழுவின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

'எமது அறிக்கையில் எந்த ஒரு அரசியல் வன்முறையையும் நாம் உட்படுத்தவில்லை. சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்களை மாத்திரமே நாம் எமது அறிக்கையில் சேர்த்திருக்கிறோம்' என்று நிர்மால் குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டவர்களின் அரசியல் தொடர்புபற்றி கேள்வி எழுப்பியபோதே இந்த விளக்கத்தை அவர் அளித்திருந்தார்.

பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முஹமது யூனிஸ், பங்களாதேஷில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் சமூக விடயத்திற்கு அப்பால் அரசியல் பின்னணி கொண்டது என்று செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் பரிஷாத் அறிக்கையின் படி, 68 மாவட்டங்கள் மற்றும் பெருநகர் பகுதிகளில் 1,705 குடும்பங்கள் தாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 157 வீடுகள் சூறையாடப்பட்டு, சேதப்படுத்தப்பட்டு மற்றும் தீ வைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட முப்பத்து நான்கு குடும்பங்கள் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்தத் தாக்குதல்களில் சிலரது காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. 'இந்தக் குடும்பங்கள் தற்போதும் பரிதாபகரமான வாழ்க்கை ஒன்றை வாழ்கின்றனர்' என்று நிர்மால் தெரிவித்தார்.



இதில் குல்கா பிரிவில் அதிகபட்சமாக 810 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நான்கு கற்பழிப்புச் சம்பவங்களும் இங்கேயே இடம்பெற்றள்ளன. கற்பழிப்புக்கு உள்ளான பெண் ஒருவர் பேச முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். குறைந்தது 69 வழிபாட்டுத் தலங்கள், 915 வீடுகள் மற்றும் 953 வர்த்தக நிறுவனங்கள் தாக்கப்பட்டு, தீ வைக்கப்பட்டு அல்லது சூறையாடப்பட்டுள்ளன. மேலும் 21 வர்த்தக நிறுவனங்கள் பறிக்கப்பட்டிருப்பதோடு 38 பேர் உடல் ரீதியில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த சுமார் 50,000 மக்களின் உடைமைகள் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டிருப்பதோடு இந்தச் சமூகங்களைச் சேர்ந்த 2 கோடி மக்கள் அச்சத்தில் வாழ்கின்றனர் என்று நிர்மால் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையின் கீழ் இந்த சம்பவங்கள் குறித்து சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். இந்த வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும்படியும் குற்றவாளிகளை கைது செய்து தண்டிக்கும்படியும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் பரிஷாத் அமைப்பு இன்று (21) நாடு முழுவதும் தமது கோரிக்கைகளை முன்வைத்து பேரணிகளை நடத்தவுள்ளது.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது பரிஷாத் அமைப்பு எட்டு அம்ச கோரிக்கைகளையும் விடுத்தது.

இதில் சிறுபான்மையினரை பாதுகாக்கும் சட்டம் ஒன்றை செயற்படுத்தல், தேசிய சிறுபான்மை சமூகம் ஒன்றை அமைத்தல் மற்றும் சிறுபான்மையினர் அமைச்சு ஒன்றை நிறுவுதல் ஆகிய கோரிக்கைகளும் அடங்கும்.

அதேபோன்று அரசிலும் பாராளுமன்றத்திலும் சிறுபான்மையினரின் விகிதாசார பிரதிநிதித்துவத்தை அந்த அமைப்பு கோரியது.

துர்கா பூஜையின்போது இந்துக்களுக்கு மூன்று நாள் விடுமுறையும் பௌத்த முழு நோன்மதி தினம் மற்றும் கிறிஸ்தவர்களின் ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் விடுமுறை அளிக்கவும் பரிஷாத் அமைப்பு கோரிக்கை விடுத்தது.



## 27 தொழிற்சாலைகள் கால வரையின்றி பூட்டு

அதிக சம்பளம், ஊக்கக் கொடுப்பனவு மற்றும் வருகைக் கொடுப்பனவுகளை அதிகரிக்கக் கோரி ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தம் மற்றும் எதிர்ப்புகள் காரணமாக மூடப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளில் 27 தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படவில்லை என செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த வாரத்தில் ஊழியர் எதிர்ப்புக் காரணமாக மூடப்பட்ட 200 வரையான ஆடைத் தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

எனினும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் ஆடைத் தொழிற்சாலைகளில் 16 காலவரையின் மூடப்பட்டிருப்பதாகவும், பங்களாதேஷ் தொழில் சட்டத்தின் கீழ் சம்பளம் இன்றிய காலத்திற்கு மூடப்பட்டிருப்பதால் அதன் ஊழியர்கள் கோபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் எடுத்துச்செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்

### வில்பத்து வனப்பகுதி ஊடாக கொண்டு செல்ல விசேட அனுமதி

**இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ளது.**

### புத்தளம் மாவட்டத்தில்

**(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)**

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் புத்தளம் மாவட்டத்திலுள்ள 470 வாக்களிப்பு நிலையங்களுக்கும் நேற்று காலை எடுத்துச் செல்லப்பட்டன.

புத்தளம் சென். அன்றூஸ் மத்தியக் கல்லூரி, பாத்திமா மகளிர் கல்லூரி, செய்னப் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றிலிருந்து குறித்த வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் என்பன பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அனுமதியளிக்கப்பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டி மற்றும் வாக்குச் சீட்டுகள் என்பவற்றை எடுத்துச் செல்லும் போது புத்தளம் நகரமெங்கும் பொலிஸாரும், விஷேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதேவேளை, பூக்குளம் வாக்குச் சாவடிகளுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் வாக்குப்பெட்டிகள் என்பன வில்பத்து வனப் பகுதி ஊடாக கொண்டு செல்ல தேவையான அனுமதியை வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் பெற்றுள்ளதாகவும், கற்பிட்டி முகத்துவார வாக்குச் சாவடிக்கு படகுகள் மூலம் அதிகாரிகள் வாக்குப் பெட்டிகளுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் புத்தளம், ஆனமடு , சிலாபம் வென்னப்புவ மற்றும் நாத்தாண்டிய ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளிலிருந்தும் 6 இலட்சத்து 63 ஆயிரத்து 673 பேர் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான எச்.எம்.எஸ்.பீ.ஹேரத் தெரிவித்தார்.



இதில் புத்தளம் தேர்தல் தொகுதியில் 1 இலட்சத்து 74 ஆயிரத்து 159 பேரும், ஆனமடுவ தேர்தல் தொகுதியில் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 202 பேரும், சிலாபம் தேர்தல் தொகுதியில் 1 இலட்சத்து 34 ஆயிரத்து 178 பேரும், நாத்தாண்டிய தேர்தல் தொகுதியில் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 847 பேரும், வென்னப்பு தேர்தல் தொகுதியில் 1 இலட்சத்து 18 ஆயிரத்து 286 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அத்துடன், வாக்களிப்பதற்காக 470 வாக்களிப்பு நிலையங்களும், 58 கணக்கெடுப்பு நிலையங்ளும், 8 தபால் மூல கணக்கெடுப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். மேலும், 14,967 அரச ஊழியர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்காக தபால் மூலமான வாக்களிப்புக்களை செய்துள்ளனர். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் 15,270 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதில் 14967 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 303 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்குகள் மாலை 7.00 மணிக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனவும், அது போன்று ஏனைய வாக்குகள் எண்ணும் பணிகள் இரவு 8.00 மணியளவில் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த புத்தளம் மாவட்ட செயலாளர், அனைத்து வாக்காளர்களும் நேரகாலத்துடன் வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களிக்கு மாறும், மிகவும் அமைதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு மாவட்ட மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

### அநுராதபுரம் மாவட்டம்

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

அநுராதபுர மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுர மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான ரஞ்சித் விமலசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் அநுராதபுர மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 7 இலட்சத்து 41 ஆயிரத்து 862 வாக்காளர்கள் ( 7,41,862 ) தகுதி பெற்றுள்ளனர். மாவட்டத்தில் 636 வாக்களிப்பு நிலையங்களும் வாக்கெண்ணும் நடவடிக்கைகளுக்காக 95 நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு இதில் தபால் மூல வாக்கெண்ணும் நடவடிக்கைகளுக்காக 35 நிலையங்களும் சாதாரண வாக்குகளை கணக்கெடுப்பதற்காக 60 நிலையங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.



மாவட்ட முடிவுகளை அறிவிப்பதற்கும் வாக்கு பதிவுகளை எண்ணும் நடவடிக்கைகளுக்காகவும் அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு பிரதான கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களாக 05 ( (ஐந்து) பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை தேர்தல் கடமைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட உரிய அதிகாரிகளுக்கு தேவையான பயிற்சிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதோடு, பத்தாயிரத்துக்கும் கூடுதலான அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் இம்முறை ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை அநுராதபுரம் மாவட்டத்தில் அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது.

## மேல் மாகாணத்தில் அதிகரிக்கும் காசநோயாளர்கள்

மேல் மாகாணத்தில் கடந்த வருடம் 46 வீதமான காசநோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளதாக காசநோய் மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 25 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும், கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் மட்டுமே பதிவாகியுள்ள காசநோயாளிகளின் எண்ணிக்கை இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதாக காசநோய் மற்றும் மார்பு நோய்கள் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் சமூக சுகாதார வைத்திய நிபுணர் மிசாயா காதர் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனை சுட்டிக்காட்டினார். பதிவாகியுள்ள காசநோயாளிகளில் பெரும்பாலானோர் ஆண்கள் எனவும். புகைபிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துவதே இதற்குக் காரணம் எனவும் வைத்திய நிபுணர் மிசாயா காதர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மிதிகம படுகொலை இருவர் கைது

மிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொவியபான பாலத்திற்கு அருகில் நபரொருவரை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அஹங்கம பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.30 மற்றும் 38 வயதுகளையுடைய சந்தேகநபர்கள் இருவரும் அகுலுகஹா மற்றும் கோட்டே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மிதிகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்த் தின போட்டியில் முதலிடம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



வடமேல் மாகாண தமிழ் தின போட்டிகளின் "இசையும் அசைவும்" நிகழ்ச்சியில் பங்கேற்ற கற்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி சீ.டி.மேர்ஸி லியோறா முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வெற்றியின் மூலம் மாணவி அடுத்து வரும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகள் வியாழக்கிழமை (19) காலை குருநாகல் தெலியா கொன்னை ஹிஸ்புல்லா மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

மாணவிக்கு நீண்டகாலமாக பயிற்சி வழங்கிய ஆசிரியை திருமதி ஏ.ஆர்.எம்.ஏ.வினோஜினிக்கும்,ஏனைய ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக பாடசாலை அதிபர் பீ.ஜெனட்ராஜ் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2024 செப்டெம்பர் 21 சனிக்கிழமை

தொழுகை நேரம்

சுபஹ் - 04.45
லுஹர் - 12.06
அஸர் - 03.15
மஃரிப் - 06.09
இஷா - 07.19

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் புரட்டாதி 05

ராகுகாலம் : காலை : 9.02 - 10.32வரை
சுபநேரம் : மாலை : 3.02 - 04.32வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



தனியார் நிறுவன ஊழியர்களுக்கும்

## பெருந்தோட்ட தொழிலாளருக்கும் வாக்களிக்க விடுமுறை வழங்குங்கள்

தனியார் துறையினருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்குமாறு தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளிடம் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் நேற்று (20) தேர்தல் கடமைகளை அவதானிப்பதற்காக சென்ற அவர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



"அனைத்து தனியார் துறை மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சட்டத்தின் பிரகாரம் வாக்களிக்க தேவையான விடுமுறை காலத்தை அனுமதிக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டப்படி இது அவர்களது பொறுப்பு. விடுமுறை வழங்குவது நிறுவன தலைவர்கள் மற்றும் மேலாளர்களின் பொறுப்பாகும்.

தொழில் திணைக்களம் மற்றும் உங்கள் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட அமைச்சுகள், பிற நிறுவனங்களின் சட்டங்களின்படி செயற்படவும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு நீங்கள் வழங்கும் பங்களிப்பை பாராட்டுகிறோம். குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்களிக்க தேவையான விடுமுறையை வழங்குமாறு தனியார் தோட்ட அதிகாரிகளிடமும் கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.



ஜனாதிபதி தேர்தலுக்கான களுத்துறை மாவட்ட செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதை அறிந்துகொள்வதற்காக தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்று பிற்பகல் களுத்துறை பஸ்துன்றட கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குகள் எண்ணும் மத்திய நிலையத்துக்கு விஜயம் செய்தார். இதன்போது களுத்துறை மாவட்ட செயலாளரும் தேர்தல் அதிகாரியுமான ஜானக கே. குணவர்தன மற்றும் களுத்துறை மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் காலீந்திர ஜயவீர பெர்னாண்டோ ஆகியோருடனும் அவர் கலந்துரையாடினார்.

(படம் - களுத்துறை மத்திய குறூப் நிருபர்)

## பண மோசடி செய்த ஒருவர் விமான நிலையத்தில் கைது

டுபாயிலிருந்து வந்த போது சம்பவம்



விசாரணைக்காக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். டுபாயிலிருந்து நாடு திரும்பிய போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 32 வயதுடைய கண்டியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனியார் நிறுவனமொன்றின் விற்பனை பிரதிநிதியாக பணியாற்றி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்ததாக சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுக் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## ரோயல் கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் ஜனாதிபதி ரணில் இன்று வாக்களிப்பார்

சஜித் இராஜகிரியவிலும் அநுர பஞ்சிகாவத்தையிலும் வாக்களிப்பர்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலில் பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க எம்.பி. ஆகியோர் முறையே கொழும்பு ரோயல் கல்லூரி, இராஜகிரிய மற்றும் பஞ்சிகாவத்தை வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குகளை அளிப்பர்.

அந்த வகையில் ஜனாதிபதி தேர்தலில் சுயாதீன வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு ரோயல் கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இராஜகிரியவிலுள்ள கொட்டுவேகொட விவேகாராம புராண மஹா விகாரையின் சந்திரலேகா அறநெறி பாடசாலை வாக்களிப்பு நிலையத்திலும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க பஞ்சிகாவத்தையிலுள்ள செய்கோஜி ஆரம்ப பாடசாலை வாக்களிப்பு நிலையத்திலும் தமது வாக்குகளை பதிவு செய்வர்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஹம்பாந்தோட்டை வாக்களிப்பு நிலையத்தில் தமது வாக்குகளை அளிப்பர்.

திலித் ஜயவீர நுகேகொடை பெங்கிரிவத்தை வாக்களிப்பு நிலையத்திலும் விஜேதாச ராஜபக்ஷ நாவல திறந்த பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள விக்ரமசிங்காராமய வாக்களிப்பு நிலையத்தில் தமது வாக்குகளை அளிப்பர். அத்துடன் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன ஹோமாகம வாக்களிப்பு நிலையத்தில் தமது வாக்கை அளிப்பார்.

நுவன் போப்பகே நவகமுவ ஸ்ரீசுமன ஆரம்ப பாடசாலை வாக்களிப்பு நிலையத்திலும் சரத் பொன்சேகா களனி பிரதேச சபைக்கு அருகிலுள்ள வாக்களிப்பு நிலையத்திலும் தமது வாக்குகளை அளிப்பர்.

அரியநேத்திரன் மட்டக்களப்பு அம்பிலாந்துறை கலைமகள் வித்தியாலயத்திலும் தனது வாக்கை அளிப்பார்.

பெரும்போக விவசாயிகளுக்கு

## இலவசமாக 55,000 மெ.தொன் உரம்; உலக உணவு திட்டத்துடன் ஒப்பந்தம்



அடுத்து வரும் இரண்டாவது பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு 55,000 மெற்றிக்தொன் எம்.ஓ.பி. உரத்தை இலவசமாக வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (20) கைச்சாத்திடப்பட்டது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்த உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் நிகழ்நிலையில் கைச்சாத்திடப்பட்டது. உலக உணவுத் திட்டத்தின் சார்பில் அதன் தலைவரும் இலங்கை சார்பில் அரச உரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவும் கைச்சாத்திட்டனர்.

இலங்கைக்கு இலவசமாக கிடைக்கவுள்ள இந்த உரத்தொகையின் பெறுமதி 8 பில்லியன் டொலராகும். ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 55,000 மெற்றிக்தொன் எம்.ஓ.பி. உரம் அடுத்த மாதம் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

உர விநியோகத்துக்காக செலவிடப்படவுள்ள தொகை 2.5 பில்லியன் ரூபாவாகும், இதனை வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டில் நெல் விளைச்சல், மக்காச்சோள விளைச்சல் போன்றவற்றுக்கு அத்தியாவசியமான உரமாக விளங்கும் எம்.ஓ.பி. உரம் கடந்த சில போகங்களில் விவசாயிகள் பயன்படுத்தப்படுத்தவில்லை

வெளிச்சந்தையில் ஒரு மூடை எம்.ஓ.பி. உரத்தின் விலை 8000 – 9000 ரூபாவாக உள்ளதால், அதிக விலை காரணமாக விவசாயிகள் பயிர்களுக்கு பயன்படுத்தவில்லை. பொதுவாக ஒரு போகத்துக்கு தேவைப்படும் எம்.ஓ.பி. உரத்தின் அளவு 25,000 மெற்றிக்தொன்னாகும்.

இந்த விடயத்தை கருத்தில் கொண்டு அடுத்த இரண்டு போகங்களில் வாழை விவசாயிகள் மற்றும் மக்காச்சோள விவசாயிகளுக்கு இலவச MOP உரம் வழங்குவதற்கு உலக உணவு திட்டத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. இதனை அடுத்து, 55,000 மெற்றிக்தொன் எம்.ஓ.பி. உரத்தை நாட்டுக்கு இலவசமாக வழங்க உலக உணவுத் திட்டம் முடிவு செய்தது.

## கட்சிக்கு எதிராக செயற்பட்ட எம்.பிக்களை நீக்க தீர்மானம்

பொதுஜன பெரமுன அதிரடி முடிவு







ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன மற்றும் எஸ்.எம். சந்திரசேன ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அந்த கட்சி தீர்மானித்துள்ளது.

அவர்கள் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் கட்சிப் பதவிகளிலிருந்தும் உடனடியாக நீக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த அனைத்து எம்.பி.க்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க கட்சி தீர்மானித்துள்ளது.

தேர்தல் சட்ட விதி மீறல்கள்

## சமூக ஊடகங்களில் 121 பதிவுகள் நீக்கம்

2024 ஜனாதிபதி தேர்தல் சட்ட விதிகளை மீறியதற்காக சமூக ஊடக தளங்களிலிருந்து இதுவரை 800 க்கும் மேற்பட்ட பதிவுகளை அகற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு இந்த விதி மீறல்கள் குறித்து முழுமையான விசாரணைக்கு பிறகு Meta, YouTube, TikTok மற்றும் Google போன்ற தளங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தது.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 121 பதிகள் சமூக ஊடகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் 116 பதிவுகள் அகற்றப்படவில்லை. ஏனெனில் அவை சமூக ஊடக வழிகாட்டல்களை மீறவில்லையென்று கூறப்படுகிறது.

மேலும் 500 கூடுதல் பதிவுகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு சமூக ஊடக நிறுவனங்கள் இன்னும் பதிலளிக்கவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து ஒவ்வாமையால் நபரொருவர் மரணம்

தங்காலை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தங்காலை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அவந்தி ரூபசிங்க தெரிவித்தார்.

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு தலையில் பலத்த காயங்களுடன் தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 63 வயதுடைய நபர் ஒருவரே மருந்து ஒவ்வாமை காரணமாகக் கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் மேலதிக பரிசோதனைக்காக இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து காரணமாக வைத்தியசாலையில் இதுவரை நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்துகளை வைத்தியசாலைகளில் பயன்படுத்துவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை (19) தடை விதித்துள்ளது.

## மட்டக்களப்பு, வவுணதீவில் இரு கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விளாவட்டவான் கிராம சேவகர் பிரிவில், யாட் வீதியிலுள்ள வெற்றுக் காணிக்கு அருகிலிருந்து நேற்று (20இக்கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

வவுணதீவு பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக இரண்டு கைக்குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாண்டியடி விஷேட அதிரடிப்படையினர் இரண்டு குண்டுளையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 05ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 17

### குறள் தரும் சிந்தனை



நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

*நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.*

## நாட்டின் ஜனநாயகப் பாரம்பரியம் பேணுவது அனைவரதும் கடமை

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. கடந்தகாலத் தேர்தல்களைப் போலல்லாமல் இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் முற்றிலும் வித்தியாசமானதாகவே உள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக எல்லாமாக 39 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். அவ்வேட்பாளர்களில் ஒருவர் சமீபத்தில் காலமானதையடுத்து தற்போது 38 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். எனவே நீண்டதொரு வாக்குச்சீட்டு இம்முறை காணப்படுகின்றது.

முன்னைய காலங்களில் எந்தவொரு தேர்தலையும் எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் இருமுனைப் போட்டியே நிலவுவதுண்டு. இருதரப்பினரின் ஆதரவாளர்கள் முட்டிமோதிக் கொள்வது வழமை. இருதரப்பினரும் முட்டிமோதிக் கொள்ளும் போது அசம்பாவிதங்கள், வன்முறைகள் அதிகம் சம்பவிப்பதுண்டு.

ஆனால் இம்முறை அவ்வாறான சம்பவங்கள் குறிப்பிடும்படியாக இல்லை. ஆங்காங்கே ஒன்றிரண்டு சம்பவங்களே இடம்பெற்றுள்ளன. எனவே வன்முறை சம்பவங்கள் குறைந்த தேர்தலாக இம்முறை நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலைக் குறிப்பிட முடியும். இது பாராட்டும்படியான விடயமாகும்.

38 வேட்பாளர்களும் பலமுனையில் நிற்பதாலேயே இம்முறை குறிப்பிடும்படியாக தேர்தல் வன்முறைகள் இடம்பெறவில்லை எனத் தெரிகின்றது. ஆனாலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் வார்த்தைப் பிரயோகங்கள் அதிகமாகவே இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

உலகில் ஜனநாயக ஆட்சிமுறையைப் பேணி வருகின்ற நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். சுயாதீனமான முறையில் தேர்தல் நடத்தப்பட்டு ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்தகைய ஜனநாயக ரீதியான தேர்தலில் வன்முறைக்கோ அல்லது மோசடிகளுக்கோ இடமில்லை. மக்கள் அளிக்கின்ற ஆணையின்படியே அரசாங்கம் தெரிவு செய்யப்படுகின்றது. எனவேதான் உயர்ந்த ஜனநாயக விழுமியங்களைக் கொண்டதொரு நாடாக இலங்கை விளங்குகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்கள் கடந்த மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன. அன்று தொடக்கம் கடந்த ஒரு மாத காலமாக பரந்த அடிப்படையில் இப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதிலும் கடந்த இரண்டொரு வாரங்கள் இப்பிரசாரங்கள் தீவிரமடைந்திருந்தன.

இத்தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு அபேட்சகரும் தத்தமது கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வாக்காளர்கள் மத்தியில் முன்வைத்திருந்தனர். அத்தோடு வாக்குறுதிகளையும் அள்ளி வீசியுள்ளனர். இதன் ஊடாக வாக்காளர்கள் மத்தியில் போதிய தெளிவூட்டல்களும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்துப் பிரசாரங்களும் முடிவுற்ற நிலையில், நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று காலை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்றைய நிலையில் நாட்டு மக்களுக்கு பொறுப்பு வாய்ந்த கடமைகள் உள்ளன. அவர்கள் தங்களது வாக்குகளை அளித்த பின்னர் தத்தமது வீட்டுக்குத் திரும்பி அமைதியான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதே அவர்களுக்குரிய கடமை ஆகும்.

ஜனநாயக நாடொன்றில் வன்முறைகளுக்கு இடமில்லை. தாங்கள் விரும்புகின்ற ஆட்சியாளரைத் தெரிவு செய்வதற்கான ஜனநாயக உரிமை மக்களுக்கு உள்ளது. மக்களின் விருப்புக்கு மாறாக ஆட்சியொன்று அமைக்கப்பட முடியாது. இத்தேர்தலில் மக்கள் யாரை விரும்புகின்றனரென்ற விடயம் நாளை பெரும்பாலும் தெரிந்து விடும். அதுவரை அமைதி காத்து ஜனநாயக பாரம்பரியங்களுக்கு இடமளிக்க வேண்டியது மக்களின் கடமையாகும்.

வன்முறைகளைத் தூண்டிவிடவும் குழப்பங்களை விளைவிக்கவும் தீயசக்திகள் எத்தனிப்பதற்கு எவருமே இடமளிக்கலாகாது. மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வன்முறைகளைத் தூண்டிவிடுவதற்கும் தீயசக்திகள் முற்படலாம். அற்ப நலன்களை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டே தீயசக்திகள் இவ்வாறு செயற்படக் கூடுமென்பதை மக்கள் மறந்து விடலாகாது. இது விடயத்தில் மிகுந்த அவதானமாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்து கொள்ள வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

எனவே தீயசக்திகளின் மறைமுக செயற்பாடுகளுக்கு ஆதரவோ ஒத்துழைப்போ நல்கக் கூடாது. அவ்வாறான செயற்பாடுகளையும் முயற்சிகளையும் நிராகரிக்கத் தவறக்கூடாது. சட்டம் ஒழுங்கை கையில் எடுப்பதற்கு எவருக்கும் துணைபோகவும் கூடாது. தேர்தலில் மக்களின் ஆணையின்படியே ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். மக்களின் ஆணை எதுவோ அதுவே ஜனநாயகத்தின் தீர்ப்பு என்பதை மனதில் கொண்டு ஒவ்வொருவரும் அமைதியாகவும் நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இவற்றுக்கு மாறுபாடாக செயற்படும் போது சட்டம் ஒழுங்கு மாத்திரமல்லாமல் தேர்தல் சட்டவிதிகளும் கூட மீறப்படுவதாகவும் பாதிக்கப்படுவதாகவும் அமைந்துவிடும். அது நாட்டின் ஜனநாயக விழுமியங்களுக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் ஊறு விளைவிப்பதாகவும் அமைந்துவிடும். அத்தோடு ஜனநாயகம் பாதிக்கப்பட துணைபோவதாகவும் கூட அமையலாம். அத்தகைய தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகளுக்கு எவ்விதத்திலும் துணைபோகலாகாது.

இன்று நாட்டில் மிகுந்த அமைதி நிலவுகிறது. தேர்தல் முடிவுற்ற பின்னரும் இதேவிதமான அமைதி நிலைமை தொடரும் வகையில் நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும். அதுவே ஜனநாயகப் பாரம்பரியம் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்களிக்குமாறு வேண்டுகோள்



இன்று நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் அம்பாறை தொகுதியில் 188,222 பேர், சம்மாந்துறை தொகுதியில் 99,727 பேர், கல்முனை தொகுதியில் 82,830 பேர், பொத்துவில் தொகுதியில் 184,653 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இம்மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 04 ஆகும்.

தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 27,645 ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 26,778 எனவும், அவற்றில் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட செயலாளருமான சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் தினமான இன்று நடந்து கொள்ள வேண்டிய முறை தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிசார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய தரப்புகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அம்பாறை ஹாடி உயர்தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெறுகிறது.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறுகின்றது. தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதேவேளை, வாக்காளர்கள் அனைவரும் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும், இறுதி நேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையை பயன்படுத்துமாறும் அவர் தெரிவித்தார்.

பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்கப்பட மாட்டாது.

2024ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு கோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை நிருபர்...

**ரஷ்யாவுடன் நேரடி போரில் நேட்டோ!**

# அமெரிக்க ஏவுகணைகள் மொஸ்கோவை தாக்குமா?

உக்ரைனில் நீண்ட தூர ஏவுகணை கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால் நேட்டோ ரஷ்யாவுடன் நேரடி போரில் ஈடுபடுகிறது என்றே கருதப்படும் என 14 செப்டெம்பரில் அதிபர் புட்டின் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டால் நேட்டோ எங்களுடன் நேரடி யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக கருதுவோம் என புட்டின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மீது உக்ரைன் நீண்டதூர ஏவுகணைகளை பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நேட்டோ நீக்கினால் உக்ரைன் ரஷ்ய யுத்தத்தில் நேட்டோ நேரடியாக களமிறங்குகின்றது என தான் கருதுவேன் என ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் திடமாக தெரிவித்துள்ளார்.

தற்போது நேட்டோவின் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுடன் போரில் நேரடியாக ஈடுபட்டுள்ளன. அப்படியானால், மோதலின் சாராம்சத்தில் ஏற்படும் மாற்றத்தை மனதில் கொண்டு, எங்களுக்கு முன்வைக்கப்படும் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் பொருத்தமான முடிவுகளை எடுப்போம் என்று புட்டின் கூறியுள்ளார்.

புட்டினின் கருத்துக்கள் அமெரிக்க மற்றும் நேட்டோ நட்பு பங்காளிகளை எச்சரித்துள்ளன. மேற்கத்திய நாடுகளால் வழங்கப்பட்ட நீண்ட தூர ஆயுத அமைப்புகளைப் பயன்படுத்தி ரஷ்ய இராணுவ இலக்குகளைத் தாக்குவதற்கு உக்ரேனியப் படைகளை அனுமதிக்கும் சாத்தியக்கூறுகள் பெருகிய முறையில் இப்போரில் புதிய நிலை உருவாகி உள்ளது.

ரஷ்யாவில் உள்ள இலக்குகளுக்கு எதிராக மேற்கத்திய ஆயுதங்களைப் பயன்படுத்துவதை மையமாகக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் பேச்சுவார்த்தை நடத்த இங்கிலாந்தின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் வெள்ளிக்கிழமை வோஷிங்டனுக்கு வந்தார்.

அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி ரஷ்யாவிற்குள் எல்லை தாண்டிய தாக்குதல்களை அனுமதிக்கும் கொள்கையை அமெரிக்கா சரிசெய்தாலும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இன்னும் நீண்ட தூர அமைப்புகளைப் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கவில்லை.

போர்க்கள முன்னேற்றங்களை ஒருங்கிணைக்க உக்ரைன் கடினமாக போராடி வருவதால், ரஷ்யப் படைகளால் பின்னுக்குத் தள்ளப்படும் அபாயங்களைத் தடுக்கும் வகையில், இருபுறமும் உள்ள சட்டமியற்றுபவர்களிடம் இருந்து கட்டுப்பாடுகளை தளர்த்த அதிபர் பைடன் அழுத்தத்தை எதிர்கொள்கிறார்.

அமெரிக்க இராணுவம் ஏற்கனவே உக்ரைனுக்கு உளவுத் துறை வசதிகளை வழங்கியுள்ளது. மேலும் தற்போது நீண்ட தூர தாக்கும் ஆயுத அமைப்புகளுடன், ரஷ்யாவை அழித்து இலக்கு வைப்பதில் இதற்கு முன்பும் அமெரிக்கா உதவி செய்துள்ளது.

உக்ரேனுக்கு தொடர்ந்து இராணுவ உதவியின் ஒரு பகுதியாக, உக்ரேனியப் படைகளுக்கு செய்மதி உளவுத்துறையை அமெரிக்கா வழங்குகிறது.

2023 ஒக்டோபரில் அதிகபட்சமாக சுமார் 290 கிலோமீட்டர் வரை செல்லக்கூடிய நீண்ட தூர இராணுவ தந்திரோபாய ஏவுகணை அமைப்பு (ATACMS) ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா முதன்முதலில் வழங்கியது.

கீய்வ் அரசு அதன் மேற்கத்திய ஆதரவாளர்களை இப்போர்க்களத்தில் நீண்ட காலமாகப் பயன்படுத்த அனுமதித்தது. ரஷ்ய எல்லைக்குள் நீண்ட தூரத்தை வழங்கக்கூடிய ஆயுத அமைப்புகளை முழுமையாக அனுமதித்தது.

ரஷ்யா வசமுள்ள கிரிமியாவில் வான் பாதுகாப்பு, வெடிமருந்து கிடங்குகள் மற்றும் விமானநிலையங்கள் உட்பட உயர் மதிப்புள்ள ரஷ்ய சொத்துக்களை குறிவைக்க உக்ரைன் தற்போதைய நீண்ட தூர ATACMS ஏவுகணைகளை பயன்படுத்துகிறது.

நேட்டோ நாடுகள் ரஷ்ய எல்லைக்குள் நீண்ட தூர தாக்குதல்களுக்கு மேற்கத்திய ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் அளித்தால் பாரிய விளைவுகள் ஏற்படும்.



நேட்டோ நாடுகள் ரஷ்யாவை எதிரியாக மாற்றக் கூடாது. இதனால் உங்களை நீங்களே காயப்படுத்திக் கொள்கிறீர்கள் என்றும் புட்டின் கூறியுள்ளார்.

மேற்கத்திய ஆயுதங்களால் ரஷ்யாவை தாக்க உக்ரைன் அனுமதித்ததை அடுத்து மொஸ்கோ கடுங்கோபம் அடைந்துள்ளது. ஆயினும் மொஸ்கோ ஒருபோதும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துமா என்று மேற்குலகம் தீர்மானிக்க வேண்டும் என்றும் புட்டின் எச்சரித்துள்ளார். நேட்டோ நாடுகள் ரஷ்யாவை எதிரியாக மாற்றக் கூடாது என புட்டின் கூறியுள்ளார்.

“எங்களிடம் ஒரு அணுசக்தி கோட்பாடு உள்ளது, அது என்ன சொல்கிறது என்று பாருங்கள். ஒருவரின் செயல்கள் நமது இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக இருந்தால், எங்கள் வசம் உள்ள அனைத்து வழிகளையும் பயன்படுத்துவது சாத்தியம் என்று நாங்கள் கருதுகிறோம்” என்று புட்டின் கூறினார்.





ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியை பௌஸியாவுக்கு சேவை நலன் பாராட்டு விழா

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் உயிரியல் பாட சிரேஷ்ட ஆசிரியை எஸ். எப். ஏ. பௌஸியா ஹக்கீமின் சேவைநலன் பாராட்டுவிழா கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராசீக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

சிரேஷ்ட ஆசிரியை எஸ்.எப்.ஏ. பௌஸியா 1993 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையில் இனைந்ததிலிருந்து கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் உயர்தர உயிரியல் பாட ஆசிரியையாக 30 ஆண்டுகள் இக்கல்லூரிக்கு சேவையாற்றியதுடன், 2024.08.21 ஆம் திகதியுடன் இலங்கை ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியை எஸ்.எப்.ஏ. பௌஸியா ஹக்கீம் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் உயிரியல் பாட ஆசிரியராக, கல்லூரியின் முகாமைத்துவ குழு உறுப்பினராக, பகுதித்தலைவி, ஒழுக்காற்று சபை குழு உறுப்பினராக, வகுப்பாசிரியராக, மாணவிகளுக்கு சிறந்த உளவள ஆலோசகராகவும் செயற்பட்டதுடன் முன்னாள் அதிபர் ஏ.எச்.எம். பஷீர் காலத்தில் இருந்து கல்லூரியின் வளர்ச்சி பயணத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர். ஒழுக்கம், கல்வி அபிவிருத்தியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல அதிபர்களுடன் சேவையாற்றிய ஓர் சிறந்த ஆசிரியை வாழ்த்தி பாராட்டி கௌரவிப்பதில் பாடசாலை சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

நிகழ்வில் அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற எஸ்.எப்.ஏ. பௌஸியா ஆசிரியை பற்றிய நினைவு பெயர் உரைகள் மற்றும் வரலாற்று நினைவலைகளை சபையினர் மத்தியில் பகிர்ந்து கொண்டனர்.

ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற சேவை நலன் பாராட்டு விழாவினை சங்க செயலாளர் ஆசிரியர் முஸ்தபா ஹக்கீம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். சிரேஷ்ட ஆசிரியை எஸ். எப்.ஏ. பௌஸியா 30 வருட கால ஆசிரியர் சேவையினை பாராட்டி பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டதுடன், ஆசிரியர் நலன்புரி சார்பான நினைவு பரிசினை அதிபா் ஏ.பி. நஸ்மியா சனூஸ் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.







தரம் 06 தொடக்கம் 13 வரையான பகுதித் தலைவர்கள் அதனுடன் தொடர்பான ஆசிரியர்கள் இணைந்து பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.எஸ். எம். மகூதுலெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர்களான என்.டி. நதீகா, எம்.எஸ். மனுனா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசார ஊழியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியை கணவர் ஹக்கீம் ஆசிரியர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# சிந்துவெளி திராவிட நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டு 100 ஆண்டுகள்

சிந்து சமவெளி திராவிட நாகரிகம் என்கிற கண்டுபிடிப்பு, இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றை மறுவடிவமைத்ததாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். மேலும், இந்த கண்டுபிடிப்பை நான் நன்றியுடன் திரும்பி பார்க்கிறேன் என்று ஜோன் மார்ஷல்க்கு நன்றி தெரிவித்திருக்கிறார்.

ஆங்கிலேய தொல்லியல் துறை அதிகாரியான சேர் ஜோன் மார்ஷல், ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளின் அறிக்கையை 20 செப்டெம்பர் 1924 இல் வெளியிட்டார். அந்த அறிக்கையில் சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமாக இருப்பதற்கு அதிகமான சாத்தியக்கூறு உள்ளது என்பதை உலகுக்கு அறிவித்தார். இந்த அறிவிப்பு செய்து நூறு ஆண்டுகள் ஆகின்றன.

இந்த ஆய்வை மேற்கோள் காட்டி,



"இந்தியாவின் வடமேற்கு பகுதியில் சிந்து சமவெளி நாகரிகம் இருந்தது. காலநிலை மாற்றத்தால் அங்கிருந்த மக்கள் மெல்ல இந்தியா முழுக்க பரவினர். இந்த காலத்தையும், சங்க இலக்கிய காலத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் இரண்டும் ஒரு புள்ளியில் இணைகிறது" என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர்.

இந்த கண்டுபிடிப்பின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சேர் ஜோன் மார்ஷல்க்கு நன்றி தெரிவித்திருக்கிறார். "சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு, 20 செப்டம்பர் 1924 அன்று, சேர் ஜோன் மார்ஷல் இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றை மறுவடிவமைக்கும் சிந்து சமவெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்பை அறிவித்தார். இதனை நான் நன்றியுடன் திரும்பிப் பார்த்து, அவருக்கு கூறுகிறேன். இந்த வரலாற்று சிறப்பு மிக்க கண்டுபிடிப்பின் நூற்றாண்டு விழாவை சர்வதேச மாநாடு நடத்தி சேர் ஜோன் மார்ஷலின் உருவ சிலையை தமிழகத்தில் நிறுவப்படும் என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

## 'செட்டிபாளையம் கிராம மக்களின் வாழ்வும் வளமும்'

# கலாநிதி சிதம்பரப்பிள்ளை அமலநாதன் தொகுத்துள்ள நூல் வெளியீட்டு விழா

'செட்டிபாளையம் கிராம மக்களின் வாழ்வும் வளமும்' (The life and prosperity of Chettipaalayam people) என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த (16) திங்கட்கிழமை செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நூல் உருவாக்கத்திற்கும் வெளியீட்டிற்கும் இணைப்பாளராக திருவருள் நுண்கலை மன்றம் செயற்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் கலாநிதி சிதம்பரப்பிள்ளை அமலநாதன் தொகுத்த இந்நூலின் வெளியீட்டு விழா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோகண கலந்து சிறப்பிக்க, கௌரவ அதிதிகளாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீதரன், மண்முனை தென்எருவில்பற்று உதவி பிரதேச செயலாளர் சத்திய கௌரி தரணிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூல் ஆய்வுரைகளை கிழக்கு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் வே. குணரெத்தினம் மற்றும் கட்புல தொழில்நுட்ப கலைத்துறை தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியில் முதல் பிரதி மற்றும் ஏனைய பிரதிகள் அதிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி சிதம்பரப்பிள்ளை அமலநாதன் நிகழ்த்தினார்.

'செட்டிபாளையம் கிராம மக்களின் வாழ்வும் வரலாறும்' எனும் வரலாற்று நூல் 706 பக்கங்களைக் கொண்டது. மட்டக்களப்பு சரித்திரத்தினை அறிய முற்படும் எவரும் செட்டிபாளையம் கிராமத்தவர்களின் பங்களிப்பை புறந்தள்ளி வரலாற்றை தெரிந்து விட முடியாது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பூர்வ சரித்திரம் இக்கிராமத்தில் ஏட்டு வடிவில் பன்னெடுங் காலமாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

இவ்வேடுகளின் முழுமையான பங்களிப்புடன் மட்டக்களப்பு மான்மியத்தை உருவாக்கியதாக அதன் ஆசிரியர் FXC நடராஜா குறிப்பிடுகின்றார். ஏட்டுச்சுவடி விடயதானங்களுக்கான புலமைத்துவ பின்னணி கொண்டவர்களாக இக்கிராமத்தவர் அறியப்படுகின்றனர். இவ்வாறு தொன்ம வரலாற்றை தன்னகத்தே கொண்ட பழம்பெரும் கிராமமாகவும் கல்வி கலை கலாசாரம், பண்பாடு இலக்கியம் அரசியலென பல்துறை சார்புகளை இலங்கை தேசத்திற்கு மிளிரச் செய்யும் எழில் மிகு கிராமம் செட்டிபாளையம் எனலாம்.



செட்டிபாளையம் கிராமத்தின் வரலாறு 'செட்டிபாளையம் கிராமத்தின் வாழ்வும் வளமும்' என்னும் தலைப்பின் கீழ் புவியியல், கல்வி, வாழ்வாதாரம், அனர்த்தம், பண்பாடு, கலை, மருத்துவம், சோதிடம், விளையாட்டு, மொழி, தமிழ்ப் பணி, ஆத்மீகம், அரசியல், மாண்மியமும், குடி அமைப்பும் ஆகிய பதினைந்து துறைகளின் ஊடாக பதினாறு கட்டுரைகள் மூலம் இக்கிராமத்தின் வரலாறு பதினெட்டு துறைசார்ந்த பிரதான ஆசிரியர்களால் ஆய்வு செய்யப்பட்டு நூல் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







**வி.ரி.சகாதேவராஜா...✍**
(காரைதீவு குறூப் நிருபர்)

# இஸ்ரேல்–ஹிஸ்புல்லா யுத்தத்தை தீவிர நிலைக்கு இட்டுச்சென்ற பேஜர், வோக்கிடோக்கி வெடிப்புகள்!



லெபனானில் பேஜர்கள் வெடிப்பு நடந்த அடுத்த நாளே நிகழ்ந்த வோக்கி டோக்கி வெடிப்புகளில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 450 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவால் பயன்படுத்தப்பட்ட வோக்கிடோக்கிகள் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகள், பெக்கா பள்ளத்தாக்கு, தெற்கு லெபனான் போன்ற ஹிஸ்புல்லா கோட்டைகளாகக் கருதப்படும் பகுதிகளில் வெடித்தன.

கடந்த செவ்வாய்க் கிழமையன்று ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பேஜர்கள் வெடித்து 12 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் சிலரின் இறுதிச் சடங்குகளிலும் சில வாக்கி டோக்கி வெடிப்புகள் நிகழ்ந்தன. இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஹிஸ்புல்லா குற்றம் சாட்டியது. ஆனால், இஸ்ரேல் அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

இந்தத் தாக்குதலுக்கு முன்னதாக, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கால்லன்ட், போர் ஒரு புதிய கட்டத்தை நோக்கி நகர்வதாக அறிவித்தார். அப்போது, இஸ்ரேலிய இராணுவப் பிரிவு வடக்கே நிலைநிறுத்தப்பட்டது.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், "இது மிகத் தீவிரமான விஷயம்" என்று எச்சரித்தார். அதோடு, "அதிகபட்ச கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு" அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தார்.



"இந்தச் சாதனங்கள் அனைத்தையும் வெடிக்கச் செய்ய ஒரு பெரிய திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கை முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்" என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஹிஸ்புல்லாவின் ஊடக அலுவலகம் மறுநாள் நடந்த இரண்டாவது வெடிப்பில் 16 வயது சிறுவன் உட்பட அமைப்பைச் சேர்ந்த 13 பேர் கொல்லப்பட்டதாக அறிவித்தது.

அங்கு நடந்த கொடிய வெடிப்புகள் ஹிஸ்புல்லாவுக்கு மற்றோர் அடியையும், அதன் முழு தகவல் தொடர்பு வலையமைப்பிலும் இஸ்ரேல் ஊடுருவி இருக்கலாம் என்பதற்கான சாத்தியமான அறிகுறிகளையும் பிரதிபலிக்கிறது.

செவ்வாயன்று ஆயிரக்கணக்கான பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறியதைக் கண்டு லெபனான் மக்கள் பலரும் அதிர்ச்சியும் கோபமும் அடைந்துள்ளனர்.

புதன்கிழமையன்று தெற்கு பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதியான தஹியாவில் கொல்லப்பட்டவர்களில் நால்வரின் இறுதிச் சடங்கில் உள்ளூர் நேரப்படி, மாலை 5 மணியளவில் பலத்த வெடிச்சத்தம் கேட்டது. துக்க நிகழ்வில் இருந்தவர்களிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டது. பின்னர் நாட்டின் பிற பகுதிகளிலும் வெடிப்புகள் நடப்பதாகத் தகவல்கள் வரத் தொடங்கின.



வெடித்த வாக்கி டோக்கிகள், பேஜர்கள் ஐந்து மாதங்களுக்கு முன்பு ஹிஸ்புல்லாவால் வாங்கப்பட்டுள்ளன. இஸ்ரேலிய உளவுத்துறை, ஹிஸ்புல்லாவுக்கு இந்த வோக்கி டோக்கிகள் வழங்கப்படுவதற்கு முன்பாக, ஆயிரக்கணக்கான வோக்கி டோக்கிகளில் இப்படியான பொறிகளைப் பொருத்தியதாக, இரண்டு ஆதாரங்களை மேற்கோள் காட்டி, தி ஆக்சியோஸ் என்ற செய்தி இணையதளம் குறிப்பிட்டுள்ளது.

செவ்வாயன்று வெடித்த பேஜர்களுக்குள் சிறிய அளவிலான வெடிபொருட்களை இஸ்ரேல் மறைத்து வைத்ததாக அமெரிக்க, லெபனான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெய்ரூட்டில் உள்ள ஒரு மருத்துவமனையைச் சேர்ந்த கண் மருத்துவர் சுமார் 60% பேர் குறைந்தது ஒரு கண்ணையாவது இழந்துள்ளதாகவும் பெரும்பாலானவர்கள் இரு கையையும் இழந்துள்ளதாகவும் கூறினார்.

"ஒரு மருத்துவராக என் வாழ்வின் மிக மோசமான நாள் இது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும், காயமடைந்தவர்களின் நிலையும் மிக மோசம்" என்று மருத்துவர் எலியாஸ் வார்ராக் கூறினார்.

"துரதிர்ஷ்டவசமாக, எங்களால் நிறைய பேரின் கண்களைக் காப்பாற்ற முடியவில்லை. அவர்களில் சிலருக்கு கண்களோடு நிற்காமல், மூளையிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் ஹிஸ்புல்லாவை அசைத்துப் பார்த்திருக்கலாம், ஆனால் அவர்கள் இதன் காரணமாக அமைதியடைந்துவிட மாட்டார்கள் என்பதே உண்மை.

இஸ்ரேல் ஆபத்தான மற்றும் சிறப்பு வாய்ந்த ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் கண்ணோட்டத்தில் இந்த ஆயுதங்கள்' மிகவும் பயனுள்ளதாக இருந்தன என்பது தெளிவாகிறது.

பேஜர்களில் ஏற்பட்ட வெடிப்புகளைத் தொடர்ந்து, செப்டெம்பர் 18 மாலையில் லெபனானில் வோக்கி டோக்கிகளில் வெடிப்புகள் ஏற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பேஜர் தாக்குதல் ஒரு பெரிய மோதலின் ஆரம்பம் என்றும், இது மிகவும் ஆக்ரோஷமான நிலைப்பாட்டை எடுக்கும் அல்லது தெற்கு லெபனானுக்குள் நுழைவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதல்கள் லெபனான் மற்றும் அந்தப் பிராந்தியத்தில் கோபத்தைத் தூண்டியுள்ளன.

தாக்குதலின்போது பொதுமக்கள், காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் குடும்பங்கள் பற்றி இஸ்ரேல் கவலைப்படாததும் இந்தக் கோபத்திற்கு ஒரு காரணம்.

லெபனானுக்கான ஈரான் தூதரும் பேஜர் வெடிப்பில் காயமடைந்தார். இந்தச் சமீபத்திய தாக்குதல்கள் பிராந்தியத்தை மீண்டும் போரின் விளிம்புக்குக் கொண்டு வந்துள்ளன.



# திருகோணமலை மாவட்ட வருடாந்த சாரணர் பாசறை

பாடசாலை மாணவர்களிடையே தியாகம், அர்ப்பணிப்பு, தலைமைத்துவம், முதியோரை மதித்தல், முன்னாயத்தம், சுயமாக இயங்கும் தன்மை, ஏனைய மதத்தினரின் கலை கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளித்தல் போன்ற பண்புகளை வளர்க்கும் நோக்கில் திருகோணமலை மாவட்ட சாரணர் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த திருகோணமலை மாவட்ட இருபாலான பல்லின பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற வருடாந்த மாவட்ட சாரணர் பாசறை திருகோணமலை கிண்ணியா, சூரங்கல் அல் அமீன் மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 13 முதல் 15 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் நடைபெற்றது.



இப்பாசறையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள பாடசாலைகளைச் சேர்ந்த சாரண மாணவர்கள், சாரண பொறுப்பாசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாசறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், கலை கலாசார நிகழ்வுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...✍**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# விசேட தேவையுடைய மாணவர்கள் கலைவிழா





ஹம்பாந்தோட்டை வலய பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலைவிழா ஹம்பாந்தோட்டை வலய விசேட தேவையுடைய மாணவர் கல்விப் பிரிவினால் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

சமூகத்திலுள்ள மாற்றாற்றல் கொண்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களது இடர்பாடுகளை வைத்திய பரிசோதனைகள் மூலம் கண்டறிந்து குறைபாடுகள், இடர்பாடுகளக்கு ஏற்ப விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்பொழுது அரசாங்க பாடசாலைகளில் சாதாரண மற்றும் விசேட வகுப்பறைகளில் கல்வியை போதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் ஹம்பாந்தோட்டை வலயத்திலுள்ள இருபதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்தும் நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலைவிழாவில் பங்கேற்று தமது திறமைகளை வெளிக்காட்டி பார்வையாளர்களைக் கவர்ந்தனர்.

இந்த நிகழ்வில் தென்மாகாண கல்வித் திணைக்களத்தின் விசேட தேவையுடைய மாணவர் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். எம், எஸ். யூ. கே. ரத்னாயக்க, ஹம்பாந்தோட்டை வலய விசேட தேவையுடைய மாணவர் கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச். பீ. சானக, ஹம்பாந்தோட்டை வலய ஆரம்பக் கல்விக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச். கே. தினுசிகா ஆகியோருடன் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பெற்றோரும் பங்கேற்றனர்.

அவர்கள் மாணவர்களைப் பாராட்டினர். தென்மாகாணத்திலுள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளில் ஹம்பாந்தோட்டை வலயத்திலுள்ள இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திலும் தற்பொழுது விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதோடு, இதிலிருந்தும் கலைவிழாவில் மாணவர்கள் பங்குபற்றி தனது திறைமைகளை வெளிக்காட்டி அனைவரினதும் பாராட்டுக்களை பெற்றமை விசேட அம்சமாகும்.

**எம். இர்பான் ஸகரியா...✍**
(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# கொக்கட்டிச்சோலையில் மாபெரும் ஜோதிர்லிங்க கண்காட்சி

( காரைதீவு குறூப் நிருபர்)

இலங்கையின் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கிராமத்தில் அமைந்துள்ள தான் தோன்றீஸ்வரம்ஆலயத்திற்குமுன்பாக உள்ள சிவ அரண்மனையில் 12 ஜோதிர் லிங்க தரிசனம் அண்மையில் ஆரம்பமாகியது.

குறித்த ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு, பத்தாம் வட்டாரம் கொக்கட்டிச்சோலை தெற்கில் அமையப்பெற்றுள்ள ஜோதிர்லிங்க கலைக் கூடத்திலும் விசேட தரிசனமானது ஆரம்பமாகியது. இது எதிர்வரும் 23.09.2024 வரை பக்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் விசேடமாக, தண்ணீர்ப் பந்தல் 12 ஜோதிர்லிங்க தரிசனம், ஆன்மீக படவிளக்கக் கண்காட்சி

ஆகியன மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற உள்ளன.

இலங்கையில் உள்ள இரண்டு தான்தோன்றீச்சரங்களில் இது ஒன்று. போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் "புல் லுண்ட கல் நந்தி" இக் கோவிலின் பெருமைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

குறித்த ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மகோற்சவமானது கடந்த 04.09.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று 22 இல் தேரோட்டமும் 23.09.24 இல் தீர்த்தமும் இடம்பெறவுள்ளது.





## இன்றைய பலன்கள்

(21.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும் . வரன்கள் வாசல் தேடி வந்து மகிழ்ச்சி தரும்.

**ரிஷபம் :**
உத்தியோகத்தில் எதிர்பார்த்த ஊதிய உயர்வு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர்.

**மிதுனம்:**
பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அண்ணன் தம்பிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

**கடகம்:**
நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். தாய் வழி ஆதரவு திருப்தி தரும் .

**சிம்மம்:**
தொழில் வளர்ச்சி திருப்தி தரும். அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும் .

**கன்னி:**
வருமானம் உயரும். வளர்ச்சி கூடும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**துலாம்:**
குடும்ப முன்னேற்றம் கூடும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு.

**விருச்சிகம்:**
வரவைக் காட்டிலும் செலவு கூடலாம். இருந்தாலும் வாழ்க்கை தேவைகள் முழுவதும் பூர்த்தியாகும்.

**தனுசு:**
பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். புனித பயணங்கள் அதிகரிக்கும் .

**மகரம்:**
புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். தொழில் ரீதியாக சூடு பிடிக்கும்.

**கும்பம்:**
பிள்ளைகளின் முன்னேற்றம் ,தொழில் வளர்ச்சி ,பொருளாதாரத்தில் உயர்வு போன்றவை திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:**
கொஞ்சம் கவனம் தேவை. தடைகள் அதிகரிக்கும். உறவுகள் பகைக்கலாம். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்ய இயலாது.

## ஜனாதிபதி தேர்தல்...

ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சுற்றுநிருபங்கள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அது சம்பந்தமாக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலையொட்டி நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொலிஸாருக்கு மேலதிகமாக முப்படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்குப்பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை உரிய இடங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் நேற்றுக் காலை முதல் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான விசேட போக்குவரத்து சேவைகளும் இடம்பெற்றன.

இன்று பிற்பகல் 4.00 மணிக்கு வாக்களிப்பு நிறைவடைவதுடன், அதனையடுத்து நள்ளிரவுக்கு பின்னர் தபால் மூல வாக்களிப்பு பெறுபேறுகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து ஏனைய தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

அந்த வகையில் உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகளை தகவல் திணைக்களத்தின் மூலம் ஊடகங்களுக்கு வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், உத்தியோகபூர்வமற்ற பெறுபேறுகளை வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் ஊடகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காலையில் நேர காலத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தமது வாக்குகளை அளித்து அமைதியாக வீடுகளுக்கு செல்லுமாறு பொதுமக்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க உட்பட 39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அவர்களுள் ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸ் என்ற வேட்பாளர் மரணமடைந்ததால் உத்தியோபூர்வ வேட்பாளர்களாக 38 பேர் மாத்திரமே இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தேர்தல் வாக்குச்சீட்டில் 39 வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் சட்டத்தின் 22(1) (ஆ) உப பிரிவுக்கமைய வாக்குச்சீட்டு மற்றும் வாக்கெடுப்புக்குரிய ஏனைய அனைத்து ஆவணங்களிலும் மரணமடைந்த வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டுள்ளது என்பதாகக் கருதப்படும் என்றும் அதன்படி ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸுக்கு எவராவது வாக்களித்தால் அது நிராகரிக்கப்பட்டதாக கருதப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இம்முறை ஜனாதிபதி தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை சேர்ந்த 22 வேட்பாளர்களும் வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒரு வேட்பாளரும் 15 சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

சுயேட்சை வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளராக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரகுமார திசாநாயக்கவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்சவும் போட்டியிடுகின்றனர்.

அதேவேளை தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பாக விஜேதாச ராஜபக்ச, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திலித் ஜயவீர, சோசலிச மக்கள் மன்றம் சார்பாக நுவன் போபகே, ஐக்கிய சோசலிசக் கட்சி சார்பாக சிறிதுங்க ஜயசூரிய, சமபிம கட்சி சார்பாக நாமல் ராஜபக்ச, எங்கள் மக்கள் கட்சியின் வேட்பாளராக ஜே.டி.கே.விக்ரமரத்ன, புதிய சுதந்திர முன்னணி சார்பாக ஒசல ஹேரத், அருனலு மக்கள் கூட்டணி சார்பாக என்.ஆர்.கிசாந்த், சோசலிசக் கட்சி சார்பாக மஹிந்த தேவகே, இலங்கை தொழில் கட்சி சார்பாக ஏ.எஸ்.பி.லியனகே, ஜன நாயக ஐக்கிய தேசிய கட்சி சார்பாக அனோஜ் டி சில்வா, தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பாக பி.டபிள்யூ. எஸ்.கே.பண்டாரநாயக்க, சோசலிச சமத்துவ கட்சி சார்பாக பானி விஜேவர்தன, ஜனநாயக ஐக்கிய கூட்டணி சார்பாக மொஹமட் இன்பாஸ், நவ சிஹல உறுமய சார்பாக சரத் மனமேந்திர, நவ சமசமாஜ கட்சி சார்பாக பிரியந்த விக்ரமசிங்க, ஐக்கிய லங்கா மக்கள் கட்சி சார்பாக ஜனக ரத்நாயக்கவும் ஜனசத பெரமுன சார்பில் பத்தரமுல்ல சீலரத்ன தேரர், ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சி சார்பாக லலித் டி சில்வா ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

சுயேட்சை வேட்பாளர்களாக அக்மீமன தயாரத்ன தேரர், சரத் கீர்த்திரத்ன, சிறிபால அமரசிங்க, ரொசான் ரணசிங்க, சரத் பொன்சேகா, அரியநேத்திரன், அன்டனி விக்டர் பெரேரா, கே.கே.பியதாச, எம். பேமசிறி மானகே, அஜந்த டி சொய்சா, அனுர சிட்னி ஜயவர்தன, சமிந்த அனுருத்த, கே.ஆனந்த குலரத்ன, பி.எம்.பண்டாரநாயக்கே, எம்.திலகராஜ் ஆகியோரும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாக்காளர் அட்டை இன்றியும்...

தலைவர் தெரிவித்தார். இதேவேளை ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் இதுவரையில் கிடைக்காத வாக்காளர்கள் தாம் வசிக்கும் பகுதி தபால் நிலையத்தில் இன்றையதினமும் அவற்றை பெற்றுக் கொள்ளமுடியுமென,தபால்திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை இன்று தபால் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென, பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் தற்போது தயார் நிலையிலுள்ளதாக, நாடளாவிய ரீதியிலுள்ள மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 1,204 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக, அம் மாவட்ட தேர்தல் அதிகாரி பிரசன்ன கினிகே தெரிவித்தார்.

அத்துடன் கொடுப்பனவு ஒதுக்கீடுகள் தொடர்பாக சிக்கல்கள் காணப்பட்டாலும், அனைத்து வாக்களிப்பு நிலையங்களும் உரிய முறையில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

அதற்காக அனைத்து கிராம அலுவலர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளதாக, அகில இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்தார்.

## உரிமையாளர்களுடனான...

அங்கீகாரம் கிடைத்தவுடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான துரித திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படுமெனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (20) காலை நடைபெற்ற இலங்கை இளம் தொழில்முனைவோர் சபையினது (Chamber Of Young Lankan Entrepreneurs) (COYLE) நிர்வாக சபையுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

மிக விரைவில் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வது தனது எதிர்பார்ப்பாகுமெனத் தெரிவித்த ஜனாதிபதி, அதற்கு தேவையான மூலோபாய திட்டங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் விவசாய நவீனமயமாக்கல் அதில் பிரதான பிரிவெனவும் குறிப்பிட்டார்.

20 க்கும் மேற்பட்ட நாடுகளின் வலையமைப்புடன் இணைந்த G20 அமைப்பின் இளம் தொழில் முனைவோர் கூட்டணியின் அங்கத்துவத்தை தற்போது பெற்றுக் கொள்ளமுடிந்துள்ளதாகஜனாதிபதியிடம் அறிவித்த இலங்கை இளம் தொழில்முனைவோர் சபையினர், தாம் முன்னெடுத்துள்ள பல்வேறு தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டங்களுக்கு KPMG மற்றும் PMI உள்ளிட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஆரம்ப நிலையிலுள்ள நிறுவனங்கள் மற்றும் வணிகங்களுக்கு விரைவான உதவி மற்றும் வசதிகளை வழங்குவதற்காக சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் (IIT) இணைந்து திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அமெரிக்கா, டுபாய், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள தனது நிர்வாக சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் இலங்கையின் இளம் தொழில் முனைவோர் சபையினர், இலங்கையின் தொழில் முயற்சியாளர்களுக்கு தமது வர்த்தகங்களை விரிவுபடுத்துவதற்கும் உள்ளூர் உற்பத்திகளை உலகளவுக்கு கொண்டு செல்வதற்குமான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதியிடம் அவர்கள் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நமது நாட்டின் இருப்புக்காக சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்துவதிலும், ஏற்றுமதியை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்த பொருளாதார மாற்றத்தை ஆதரிப்பதற்காக நாம் புதிய நிறுவனங்களை நிறுவ இருக்கிறோம். அதுவே முன்னோக்கி செல்லும் ஒரே வழியாகும்.

தனியார் பிணைமுறி உரிமையாளர்களுடனான பேச்சுவார்த்தைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனவே நமது வங்குரோத்து நிலையிலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறுவதே அடுத்த முக்கிய படியாகும். அதன் பின்னர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் விரிவான திட்டத்தை தொடங்குவோம்.

ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்லும் போது, அனைத்து முறைமைகளையும் மூலோபாயங்களையும் மாற்றியமைக்க வேண்டும். அதனை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

விவசாய நவீனமயமாக்கல், விவசாயம் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளை திறந்து விடுவது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகிறோம். ஒற்றை சாளர முறைமையை (SingleWindow System) அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த செயற்பாடுகளை நெறிப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலத்தில் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னுரிமை அளித்தோம். அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த ஒரு மாதத்துக்குள் உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்கும். அதன் காரணமாக 1015 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் கடன் செலுத்துவதற்கு நிவாரணம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் இன்று மாலை முறையான அறிவிப்பை வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## தொடர்பு சாதன பயன்பாட்டை...

பொது நிகழ்வுகள் மற்றும் நீண்டதூர சுற்றுப்பயணங்களை இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்" என அறிவுறுத்தியுள்ளது. இக்காலப்பகுதியில் தொடர்பாடல் உபகரணங்களை பயன்படுத்துவதை தவிர்க்குமாறும் இலங்கையரை இலங்கைத் தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகம், அங்குள்ள இலங்கையருக்கு உதவுவதற்காக பல துரித தொலைபேசி இலக்கங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## பல்கலை அனுமதிக்கான...

அவர்களில் 87,723 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கமைய சுமார் 45,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இவர்களில் 41,895 பேர் ஆரம்ப கட்டத்திலும், மீதமுள்ள 3,000 பேர் சிறப்பு நுழைவு மற்றும் கூடுதல் நுழைவு தெரிவின் கீழ் உள்வாங்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பிரவேசித்து அனுமதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் மற்றும் தெரிவு செய்த பாடநெறி பற்றிய தகவல்களை மாணவர்கள் அறிந்துகொள்ள முடியும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.ugc.ac.lk ஐ பார்வையிடுவதன் மூலம் இந்தத் தகவல்களை மாணவர்கள் அறிந்துகொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக அரசாங்க தகவல் நிலையத்துக்கு குறுஞ் செய்தியை (எஸ்.எம்.எஸ்.) அனுப்புவதன் மூலமும் தகவல்களை பெறலாம்.

UGC இடைவெளி பெயர் இலக்கத்தை குறிப்பிட்டு 1919 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்புவதன் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலை அனுமதிகள் பிரதி செயலாளர் ஷாலிகா ஆரியரத்னவும் குறிப்பிட்டார்.

## வாக்களிப்பு நிலையங்களின்...

நிலையங்களிலோ அசம்பாவித நிலைமை ஏற்படுமாயின் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குகள் சூனியமாக்கப்படும்.

அந்த தொகுதிகளில் மீண்டும் வாக்கெடுப்பை நடத்தும்வரை நாடளாவிய ரீதியிலான இறுதி தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படுமெனவும், அவர் குறிப்பிட்டார்.

ஆகையால் தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றி சுமுகமாக தேர்தலை நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் அவசியமெனவும், அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தரப்பினராயினும், அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலாவது தேர்தல் முடிவு...

முடிவுகள் பெரும்பாலும் முதலில் வெளியாகுமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

தேர்தல் முடிவுகளை விரைவாக வெளியிடுவதற்கான விசேட வேலைத்திட்டத்தை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. தபால் வாக்குகள் எண்ணும் பணி இன்று மாலை 4.15 மணிக்கு ஆரம்பமாகிறது.

இவ்வருட ஜனாதிபதி தேர்தலில் சுமார் ஏழு இலட்சம் அரசாங்க ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலை...

ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் நாளை மறுதினம் 23ஆம் திகதி முதல் விடுதிகளுக்கு செல்ல முடியுமென, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை கடந்த 12ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜம்மியத்துல் உலமா சபை...

அச்செய்திக்கும் தமது சபைக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை அறிவித்துள்ளது.

அப்போலி செய்தியில் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற பாணியில் தகவல் பகிரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் தலைமையகத்தில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது. அத்தோடு குறிப்பாக, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை எந்தவொரு அரசியல் கட்சியை ஆதரித்தோ அல்லது எந்த வித அரசியல் நிலைப்பாட்டையோ இதுவரையில் எடுத்தது இல்லையெனவும், உலமா சபையின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

## 3 பேர் பணி நிறுத்தம்...

ஈடுபட்டிருந்த பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூன்று பேரே இவ்வாறு சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம் ஏற்கெனவே வாக்குமூலம் பதிவு செய்ததுடன், அதற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமையவே அவர்கள் மூன்று பேரும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னராக வினாத்தாளை கையடக்க தொலைபேசி மூலம் புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் ஊடாக பகுதிநேர வகுப்பு ஆசிரியர்கள் சிலருக்கு அனுப்பியதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அவர்களிடமே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களமும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

வினாத்தாள் கசிந்துள்ளதாக தகவல் வெளியானதையடுத்து பரீட்சைகள் திணைக்களம் விசாரணை நடத்தியதுடன், அம்முதற்கட்ட விசாரணை அறிக்கையுடன் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை விசாரணை முடிவின்படி அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியும் கல்வி அமைச்சரும் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும், கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 15ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது

# கிழக்கின் குரல்



# பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்

## தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

### மட்டக்களப்பு மாவட்டம்: 442 வாக்களிப்பு நிலையங்கள்







**பெரியபோரதீவு தினகரன், புதிய காத்தான்குடி தினகரன், மாளிகைக்காடு குறூப், மட்டக்களப்பு குறூப், கல்லடி குறூப் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்திலும் தேர்தல் ஒருங்கிணைப்பு நிலையமாகவுள்ள மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலிருந்து மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 442 வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டன. எனினும் அமைதியான முறையில் உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் தேர்தல் கடமையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக இம்முறை 6,250 அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளதுடன் மாவட்டத்தில் மொத்தமாக 1,516 பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

### அம்பாறை மாவட்டம்: 184 வாக்களிப்பு நிலையங்கள்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையமாக செயற்படும் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்திலிருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணிகள் நேற்று காலை 8 மணியிலிருந்து ஆரம்பமானது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் 555,432 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்படுகின்றன. அதன்படி அம்பாறை 188,222 பேர், சம்மாந்துறை 99,727 பேர், கல்முனை 82,830 பேர், பொத்துவில் தொகுதியில் 184,653 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் 184 அம்பாறை வாக்களிப்பு நிலையங்கள் 93 சம்மாந்துறை வாக்களிப்பு நிலையங்கள் 74 கல்முனை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் 177 பொத்துவில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.



அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடி படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிசார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தக அபேவிக்ரம குறிப்பிட்டார்.

வாக்களிப்பு நிலையத்தில் செப்டெம்பர் 21ஆம் திகதி காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 04 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### திருகோணமலை மாவட்டம்: 318 வாக்களிப்பு நிலையங்கள்





**கிண்ணியா மத்திய, திருகோணமலை, கந்தளாய் தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**



திருகோணமலை மாவட்டத்தில், ஜனாதிபதித் தேர்தலுக்கான 318 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று (20) காலை திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் ஆரம்பமானது.

நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் 318 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் யாவும் பொலிஸ் பாதுகாப்புடன், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாராச்சி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர். சசிலன் மற்றும் அஞ்சல் வாக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலர் எஸ். கே. டி. நிரஞ்சன் ஆகியோரின் நேரடி கண்காணிப்பின் கீழ், வாக்கு சாவடிகளுக்கு வாக்கு பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுக்கள் உள்ளிட்ட தேவையான ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த மாவட்டத்தில் அமைதியான முறையில் தேர்தலைநடாத்துவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்காக ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுவரை, தேர்தல் வன்முறை குறித்து, பெரிய அளவில் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார். அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிசார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனையதரப்புக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், வாக்கெண்ணும் மற்றும் வாக்களிப்பு நிலையங்களின் கடமைகளுக்காக 4000 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

24 பிரதான வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்கெண்ணும் பணிக்காக 10 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்குகள் எண்ணும் பணி மாலை 04.15 மணியளவில் ஆரம்பமாகும் என்றும், பிரதான வாக்குகளை எண்ணும் பணிகள் இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கப்படும் எனவும் அவர், தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் 315,925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில் மூதூர் தேர்தல் தொகுதியில் இருந்து 123,363 வாக்காளர்களும்,திருகோணமலை தேர்தல் தொகுதியில் இருந்து 105,005 வாக்காளர்களும், சேருவில தேர்தல் தொகுதியில் இருந்து 87,557 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டி

**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனைக் கல்வி மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டி (18) புதன்கிழமை சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

சம்மாந்துறை கல்வி வலயம் ஏற்பாடு செய்த மாவட்டமட்ட போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, பி. பரமதயாளன், எச். நைரூஸ்கான்,எம்.சியாட், ஏ.பார்த்தீபன், ஏ.றியாசா, எம்.நௌபர்டீன் , உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் .



கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ . நசீர் வரவேற்புரை நிகழ்த்த வளவாளர் கே.குணரத்ன விளக்க உரை நிகழ்த்தினார் .

தொடர்ந்து எழுத்தாக்கம் மற்றும் நாடக போட்டிகள் இடம் பெற்றன.

'சுத்தமாக இருப்போம், பசுமையோடு இருப்போம்'

# சாய்ந்தமருதில் றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் சிரமதானம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



சாய்ந்தமருது நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் 'சுத்தமாக இருப்போம், பசுமையோடு வாழ்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் பாடசாலை சுற்றுப்புற சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் நடைபெற்றுவருகின்றது.

குறிப்பாக மாணவர்களுக்கு தொற்று நோய்களை உருவாக்கும் அழுக்குகள், குப்பைகள் அற்ற ஒரு புது யுகத்தை உருவாக்கும் முகமாக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை சூழலிலுள்ள கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டு சுத்தமாக்கும் சிரமதான பணி இதன்போது மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமூக சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை பணிப்பாளர், அமைப்பின் ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# ஒருநாள் புகைப்பட பயிற்சி பட்டறை

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு (SEDD) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி (EDB) பிரிவுகளால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் புகைப்பட பயிற்சி பட்டறை அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபிர் தலைமையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.ஆர்.எம். றிப்னாஸ் மற்றும் எம் எம் எஸ்.நழீறா ஆகியோரின் ஏற்பாட்டில் தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை பெற்ற பிரபல புகைப்படக் கலைஞர்களான Wildlife Photographer ஏ.எல். எம். றசீம் மற்றும் புகைப்படக்கலைஞர் ஏ.ஜி. எம். பிரோஸ் ஆகியோர்களின் வழிகாட்டலில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு புகைப்படத்துறை தொடர்பான வழிகாட்டுதல்களும் அது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இதில் சுமார் 40 இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர்.

# றாணமடு இந்துக் கல்லூரியின் புதிய கண்டுபிடிப்பு தேசிய மட்டத்துக்கு தெரிவு



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சம்மாந்துறை, றாணமடு இந்துக் கல்லூரி இவ்வருடம்(2024) புத்தாக்கப் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்ட இலத்திரனியல் கழிவுகளைக் கொண்டு உருக்கி ஒட்டும் "வெல்டிங் மெசின் (ARC Welding mechine)" கிழக்கு மாகாணமட்டப் புத்தாக்கப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளதுடன் தேசிய மட்ட புத்தாக்கப்போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

# அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ ரிவி சாந்த கணேச குருக்கள்

ஜனநாயக நாட்டில் மக்களுக்கான வாக்குரிமை என்பது கட்டாயமானது. எனவே தேர்தலை எவ்வித வன்முறைகளுமின்றி அமைதியான முறையில் முன்னெடுக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டுமென மட்டக்களப்பு ஆணைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ ரிவி சாந்த கணேச குருக்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். எனவே கட்டாயமாக மக்கள் தமது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும்.



இதனை நிறைவேற்ற சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியுள்ளது.

இலங்கை ஜனநாயக நாட்டில் எமது வாக்குரிமையானது எவ்வாறான வேலைப் பளுக்கள் இருந்தாலும் இத்தருணத்தை நன்கு பயன்படுத்தி நாட்டுக்குத் தேவையான கடந்த கால பொருளாதார நெருக்கடியிலிருந்து துன்பங்களை மீண்டு வர வேண்டி ஒரு சரியான தலைவரை தெரிவு செய்வது எமது கடமையாகும் என அவர் தெரிவித்தார்.

# வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் சாரணர் பாசறை

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் பாசறை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல கல்வி வலயங்களையும் சேர்த்த சாரண மாணவர்கள் கலந்து கொண்ட சாரணர் பாசறை பதில் மாவட்ட ஆணையாளரும், உதவி தலைமையக ஆணையாளரும், கிழக்கு மாகாண சாரண இணைப்பாளருமான திரு. பொ. சசிகுமார் அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் உதவி மாவட்ட ஆணையாளர்கள், மாவட்ட சாரண தலைவர்கள் மற்றும் சாரண மாணவர்களின் பங்களிப்புடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



90 ஆயிரத்து 607 பேர் வாக்களிக்கத் தகுதி

# மன்னாரில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன்

**மன்னார் குறூப் நிருபர்**

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலுக்கு, வன்னி மாவட்டம் மன்னார் தேர்தல் தொகுதிக்கான சகல ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்த அவர்,

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்திலிருந்து 98 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணி நேற்று (20) நிறைவடைந்துள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடை பெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸார், அதிரடிப் படையினரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வாக்கெண்ணும் நிலையமான மாவட்ட செயலக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 64 பொலிஸாரும், 47 விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முறைப்பாட்டு பிரிவுக்கு 11 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 98 வாக்களிப்பு நிலையங்களிலும் 2 பொலிஸார் வீதம் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

வாக்களிப்பு நிறைவடைந்தவுடன், வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் வாக்கெண்ணும் நிலையத்துக்கு கொண்டுச்செல்லும்போது வீதிகளில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தேர்தல் வன்முறைகள் குறித்து எவ்வித முறைப்பாடுகளும் எமக்கு கிடைக்கவில்லை. சாதாரண சட்ட மீறல்களுடன் தொடர்புடைய 28 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. குறித்த முறைப்பாடுகளுக்கு உரிய தீர்வு வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர்களில் விசேட தேவையுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கண் தெரியாதவர்கள் விசேட ஏற்பாடுகளுக்கமைய தங்களுக்கு தெரிந்த ஒருவரை அழைத்துச் சென்று வாக்களிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வாக்குப் பெட்டி விநியோக நடவடிக்கைகளை, ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் நேற்று (20) பார்வையிட்டபோது... **யாழ். விசேட, யாழ் குரூப் நிருபர்கள்**

# மன்னார் பெரிய பாலத்தடியில் விபத்து





**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் பெரிய பாலத்தடியில் மோட்டார் சைக்கிளொன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று (20) காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் காயமடைந்துள்ள நிலையில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து நடைபெற்ற இடத்தை பார்வையிட்ட போக்குவரத்து பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிறந்து இரண்டு நாட்களான பெண் குழந்தை உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

பிறந்து இரண்டு நாட்களேயான பெண் சிசு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த தம்பதியருக்கு கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, காலை பிறந்த பெண் குழந்தை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் உயிரிழப்பு தொடர்பாக, யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல்

# வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடல்

**கோப்பாய் குறூப் நிருபர், யாழ். குறூப் நிருபர்**





இன்று(21) நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடலொன்று, நேற்று (20) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகங்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் முதலாம் கட்ட நிகழ்வு மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இவ் நியமனக் கடிதம் வழங்களைத் தொடர்ந்து முதலாம் கட்ட வாக்குப் பெட்டி விநியோகம் ஆரம்பமானது. வாக்களிப்பு நிலையங்களுக்கு முதலாம் கட்ட வாக்குப் பெட்டிகளுடன் பேரூந்துகளும் சென்றன.

இந்த நடவடிக்கைகளை, யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன், தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் பத்து வைத்தியசாலைகளுக்கு ஜேர்மன் நாட்டிலிருந்து நன்கொடைகள்

## வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிப்பு




வடக்கு மாகாணத்திலுள்ள பத்து வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுக்கான அதிநவீன படுக்கைகள் உள்ளிட்ட நன்கொடைகள் ஜேர்மன் நன்கொடையாளர் ஒருவரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு, வவுனியா பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (19) மாலை நடைபெற்றபோது, நன்கொடை பொருட்கள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் கையளிக்கப்பட்டன.

ஸ்ரீ சக்தி ஆன்மீக இந்து அமைப்பினூடாக சர்வதேச இந்து கலாசார ஆலோசகரான கலாநிதி இரத்னசாமி இராமேஸ்வரன் என்பவரால் ஜேர்மன் நாட்டிலிருந்து பெறப்பட்ட இந்த நன்கொடைகள், இலங்கையின் பல பாகங்களிலும் பகிர்ந்தளிக்கப்படுகிறன.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுக்கான அதிநவீன படுக்கைகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பால் புரைக்கேறி சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில், பிறந்து 12 நாட்களேயான ஆண் சிசு ஒன்று பால் புரையேறி உயிரிழந்துள்ளது. கோப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த ராகுல் ரேணுகா என்ற தம்பதிகளின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், உயிரிழந்த குழந்தை கடந்த 31 ஆம் திகதி பிறந்துள்ளது. குழந்தையின் நிறை குறைவு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதியில் குறித்த சிசுவுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்துள்ளது.

இதன்போது, கடந்த 12ஆம் திகதி பால் புரையேறி குழந்தை உயிரிழந்துள்ளது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார்.

வடக்கின் உதயம்

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# 137 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குபெட்டிகள் அனுப்பிவைப்பு





**ஓமந்தை விஷேட நிருபர்**

இன்று (21) நடைபெறும் ஜனாதிபதுக்கான வாக்குப்பதிவை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று (20) அனுப்பி வைக்கப்பட்டது.

இலங்கையின் 09 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்குப்பதிவுகள் இன்று நடைபெறவுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு மகா வித்தியாலய வளாகத்திலிருந்து 137 வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த வாக்குப்பெட்டிகள், இலங்கை அரச பேரூந்து 15 இலும் தனியார் பேரூந்து 34 இலும் பொலிஸ் இராணுவ பாதுகாப்புடனும் அந்தந்த வாக்குச் சாவடிகளுக்கு நேற்று(20) அனுப்பி வைக்கப்பட்டன.

இது தொடர்பாக ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த, மாவட்ட தேர்தல் ஆணையாளரும் , மாவட்ட செயலாளருமான அ.உமாமகேஸ்வரன்,

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வன்னி தேர்தல் தொகுதியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தலுக்கான மிக முக்கிய ஏற்பாடான வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குசீட்டுக்களை அனுப்பும் பணி நிறைவடைந்திருக்கின்றது. இந்த தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை கண்காணிக்கும் பணியிலே 138 வலயங்களாக நாம் பிரித்திருக்கின்றோம். 138 வலயங்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற உதவி தெரிவத்தாட்சி அலுவலகர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள்.

மிக முக்கியமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சில இடங்களில் காட்டுயானைகளின் தொல்லைகள் இருப்பதனால் அதை எதிர்கொள்ளக்கூடிய விடயங்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**ந.கலைச்செல்வன் முல்லைத்தீவு**

# யாழில் 511 வாக்களிப்பு நிலையங்கள்; 4 இலட்சத்து 92,280 பேர் வாக்களிக்கத் தகுதி

**யாழ் . விசேட நிருபர்**

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக, யாழ். மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில், வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டது

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்ல போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன், அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடி படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சகோதரன் உயிரிழந்த சோகத்தில் தவறான முடிவெடுத்த சகோதரி

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில், சகோதரன் உயிரிழந்த சோகத்தில் சகோதரியும் உயிர்மாய்க்க முயற்சி செய்த நிலையில், உறவினர்களால் காப்பாற்றப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இரண்டு மாத குழந்தையின் தாயொருவரே இவ்வாறு தவறான முடிவை எடுக்கச் முயன்றுள்ளார். கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம்(19) புதன்கிழமை தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இந்நிலையில், உயிரிழந்த இளைஞனின் சகோதரி, தனது சகோதரன் உயிரிழந்த சோகத்தில், உயிர் மாய்க்க முயன்ற நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் அனுப்பி வைப்பு!





**வவுனியா விசேட நிருபர்**

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் அனைத்தும் வவுனியா மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று (20) அனுப்பிவைக்கப்பட்டன.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைள் இன்று (21. 09) நடைபெறவுள்ளது.

அதன்படி, வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் அனைத்தும் நேற்று(20) காலை 7 மணிமுதல் எடுத்துசெல்லப்பட்டன.

வவுனியா மாவட்டத்தின் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்பட்டுவரும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இருந்து குறித்த வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸாரின் பாதுகாப்புடன் பேரூந்துகளில் எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை, வவுனியாவில் 128, 585 பேர் வாக்களிக்க தொகுதி பெற்றுள்ளதுடன் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸார் உட்பட 2500க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




நுவரெலியா மாவட்டத்தில்

# 534 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் விநியோகம்

(ஹற்றன் சுழற்சி, பொகவந்தலாவை, மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்)





இவ்வாண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று (21) காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ள நிலையில், நேற்று (20) காலை முதல் நுவரெலியா மாவட்டத்துக்கான வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கப்பட்டன.

பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் இந்த வாக்குப்பெட்டிகள் உரிய நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக, மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்டச் செயலாளருமான நந்தன கலபடா தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்களில் 6 இலட்சத்து 5,292 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதில் நுவரெலியா மஸ்கெலியா தொகுதியில் 347,646 வாக்காளர்களும் கொத்மலை தொகுதியில் 88,219 வாக்காளர்களும் ஹங்குராங்கெத்த தொகுதியில் 78,437 வாக்காளர்களும் வலப்பனை தொகுதியில் 90,990 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதிப்பெற்றுள்ளனர். மேலும், தபால் மூலம் வாக்களிக்க தகுதியான வாக்காளர்களின் எண்ணிக்கை 19,748 ஆகும்.

52 வாக்கு எண்ணும் நிலையங்கள் நுவரெலியாவில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 41 வாக்கு எண்ணும் நிலையங்கள் நுவரெலியா காமினி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளதோடு, மிகுதி 11 வாக்கு எண்ணும் நிலையங்கள் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களில் 8,500 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளதோடு, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸார் என 1,748 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு 36 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், பாரதூரமான முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நந்தன கலபட தெரிவித்தார்.

# வெல்லவாயவில் காட்டுத் தீ 50 ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசம்

தீயை அணைக்க இராணுவத்தினருக்கு அழைப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)

வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வருணகம கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வடினஹெலயாய மலைதொடர் வன பகுதியில் நேற்று முன்தினம் (19) பிற்பகல் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கோடை கால வரட்சியினால், இந்த தீ காடு முழுவதும் சில மணி நேரத்துக்குள் வேகமாக பரவியுள்ளதுடன் 50 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அறிவித்தலுக்கமைய, தீயை அணைப்பதற்கு



இராணுவ அதிகாரிகள் குழுவொன்றும் வரவழைக்கப்பட்டதுடன் நேற்று முன்தினம் இரவு வரை போராடி, இத்தீ முற்றாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இனந் தெரியாத நபர்களால் இவ்வாறு தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டிலிருந்த வாக்கு அட்டைகள் திருட்டு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

தனது வீட்டில் இருந்த மூன்று வாக்காளர் அட்டைகளை இனந்தெரியாதோர் அபகரித்துச் சென்றுள்ளதாக, பாழாய்ந்த இறப்பர் தோட்டத்தில் வசிக்கும் பெண்ணொருவர்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நிவித்திகல டேல தும்மலவத்த பகுதியைச் சேர்ந்த இப்பெண் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய, சி.சி.ரி.வி.கெமராவின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொனராகலையில்...

# சிறுவர் காப்பகத்தில் இரு சிறுமிகள் மாயம்

மொனராகலை பிரதேசத்திலுள்ள சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்த இரண்டு சிறுமிகள் காணாமல் போயுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர். 14 மற்றும் 15 வயதுடைய இரண்டு சிறுமிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்த சிறுமிகள் இருவரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (19) காலை பாடசாலைக்கு சென்றுள்ள நிலையில், மீண்டும் சிறுவர் காப்பகத்துக்கு திரும்பவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பரபரப்புக்கு மத்தியில் ஹட்டன் நகரில் திருட்டு

அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை





(ஹட்டன் விசேட நிருபர்)

தேர்தல் பரபரப்புக்கு மத்தியில் ஹட்டன் நகரில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஹட்டன் மணிகூட்டு கோபுரத்துக்கருகாமையில் அமைந்துள்ள தளபாடங்கள், இலத்திரனியல் பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலேயே நேற்று (20) நள்ளிரவு இந்த திருட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளதுடன், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கைக்கடிகாரங்கள் உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் சம்பவம் தொடர்பாக, மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த ஹட்டன் பொலிஸார், திருடர்கள் கடையின் பின்புறமாக நுழைந்துள்ளமை, கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கெமராவில் பதிவாகியுள்ளதாகவும் அதன்படி மேலதிக விசாரணைகள் இடம்பெற்று இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தனர். இந்நிலையில், இது தேர்தல் காலம் என்பதனால் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கலாம் எனவும், எனவே பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் பொலிஸார் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் மாவட்டத்தில் 977 வாக்களிப்பு நிலையங்கள்





குருநாகல் மாவட்டத்தில், ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், வாக்களிப்புக்காக சகல பெட்டிகளும் வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரித்தாட்சி அதிகாரி ஆர். எம். ஆர்.ரத்நாயக தெரிவித்தார்.

14 தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய குருநாகல் மாவட்டத்திலிருந்து, 1,417,226 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் தேர்தல் தெரிவு அத்தாட்சி அதிகாரி ஆர். எம்.ஆர்.ரத்நாயக தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இம் மாவட்டத்தில் 977 வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குகள் எண்ணுவதற்காக 04 மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதில் குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரி, சேர் ஜோன் கொத்தலாவெல கல்லூரி, குருநாகல் மலியதேவ ஆண்கள் கல்லூரி, மலிய தேவ பெண்கள் கல்லூரி ஆகிய நான்கு இடங்களில் இந்த வாக்கெண்ணும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் கடமைக்காக சகல போக்குவரத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இக்பால் அலி

# விறகு வெட்டச் சென்ற குடும்பஸ்தர் உயிரிழப்பு



(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

தலவாக்கலை, மடக்கும்புற புதுக்காடு தோட்டப்பகுதியில், விறகு வெட்டச்சென்ற குடும்பஸ்த்தர் ஒருவர் மரத்திலிருந்து கீழே விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான நடராஜ் கணகேஸ்வர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன், பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கயிப்புகலை பிரதேசத்தில், உயரமான மரமொன்றில் ஏறி விறகு வெட்டிக்கொண்டிருந்தபோது, குளவி கொட்டியதில் மரத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக அருகிலிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவருடன் சேர்ந்து மேலும் ஒருவர் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில், மடக்கும்பர வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தை பார்வையிட்டதன் பின்னர், சடலம் நுவரெலியா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பிவைப்பு

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள 890 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் நேற்று (20) காலை அனுப்பிவைக்கப்பட்டன.

கண்டி பொல்கொல்லையில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழகம், கூட்டுறவு அபிவிருத்தி நிலையம் மற்றும் மாதிரிப் பாடசாலை ஆகிய இடங்கள் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் மற்றும் பிரதி தேர்தல் ஆணையாளர் சம்பத் பிரனாந்து ஆகியோர் தலைமையில் இப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியை தேர்தெடுக்கும் 2024 ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று (21) காலை 07 மணிக்கு ஆரம்பமாகி மாலை 04 மணிக்கு நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மண்சரிவு அபாயம்

# மலையக ரயில் போக்குவரத்துக்கு பாதுகாப்பு சுவர் செயற்றிட்டம்



ஊவா சுழற்சி நிருபர்

மண்சரிவு அபாயம் காரணமாக மலையக புகையிரத போக்குவரத்து சேவை மழைக் காலங்களில் அடிக்கடி தடைப்பட்டு வருகின்றது.

இதற்கு தீர்வாக, மண்சரிவு அபாயமுள்ள இடங்களில் பாதுகாப்பு சுவர் அமைக்கும் திட்டங்களை புகையிரத திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

அதன்படி, பண்டாரவளை



புகையிரத நிலையத்துக்கருகிலும் எல்ல ஒன்பது வளைவு பாலத்துக் கருகிலும் பாரிய பாதுகாப்பு சுவர் செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# கண்டிக்கு விஜயம் செய்த தேர்தல் கண்காணிப்பு குழு



கண்டியில், தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிறப்பாக சேவையாற்றுவதாக ஐரோப்பிய ஒன்றிய ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கண்டிக்கு விஜயம் செய்த, ஐரோப்பிய ஒன்றிய ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு குழு, இரு குழுவினராக கண்டி மாவட்டத்தில் பல இடங்களையும் பார்வையிட்டுள்ளனர்.

பின்னர், மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகேயை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தமது கருத்தினை தெரிவித்துள்ளனர்.

இக்குழுவில், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் சென்செஸ் ஆமர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கெரமன் மெரினோ ஆகியோரும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொனராகலையில் பள்ளத்தில் கவிழ்ந்த பஸ் ; 17 பேர் வைத்தியசாலையில்



மொனராகலை, கும்புக்கன் 14 மைல்கல் அருகில் நேற்று வெள்ளிக்கிழமை (20) இடம்பெற்ற பஸ் விபத்தில் 17 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின்போது, பஸ்ஸில் பயணித்த 17 பேர் காயமடைந்துள்ள நிலையில் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# பொருளாதார சவால்களுக்கு மத்தியில் நிலையான வளர்ச்சியை பலப்படுத்தும் UK இன் DCTS

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பலம் சேர்க்கும் ஆடைத் தொழில்துறையானது, இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையூட்டும் வகையில், தற்போது மற்றுமொரு நெருக்கடியான கட்டத்தை எட்டியுள்ளது. COVID19 தொற்றுநோயைத் தொடர்ந்து வளர்ந்து வரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள UKஇன் வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் (DCTS) பலப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒரு நாட்டின் வளர்ச்சியில் முன்னணி காரணியாக இருக்கும் நாட்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் (SMEs) இத்திட்டத்தின் தாக்கம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

DCTS ஆனது முந்தைய பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வுகளை (GSP) மாற்றியமைக்கிறது. இது இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் 99% க்கும் அதிகமான சுங்க வரிகளுக்கு தகுதியுடையதுடன் UK சந்தையில் இலங்கைக்கு மேம்பட்ட வாய்ப்புக்களை வழங்குகிறது. இலங்கையின் ஆடைகளுக்கான இரண்டாவது பெரிய சந்தையாக UK இருப்பதால், இந்தத் திட்டமானது ஏற்றுமதி வருவாயை கணிசமாக உயர்த்துவதுடன், தொழில்துறைக்கு மிகவும் தேவையான ஸ்திரத்தன்மையையும் வழங்க முடியும். பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் வர்த்தகப் பணிப்பாளர் Mara Waters, இலங்கைக்கான DCTS இன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் மேலும் கூறுகையில், “இந்த திட்டம் வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமல்ல; இது பங்காளித்துவ நாடுகளில் நிலையான வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும். இலங்கையைப் பொறுத்தவரை, இது பொருளாதார மீட்சியை கட்டியெழுப்புவது, வேலைகளை உருவாக்குவது மற்றும் வர்த்தகத்தின் அனுகூலங்கள் SME துறையில் உள்ளவர்கள் உட்பட முழு சமூகத்தையும் சென்றடைவதை உறுதி செய்வதாகும்.” என தெரிவித்தார்.



இச்சலுகை ஆரம்பிக்கப்பட்ட முதல் 11 மாதங்களில், அதாவது ஜூலை 2023 முதல் மே 2023 வரை, இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு சுமார் 571 மில்லியன் பவுண்டுகள். இந்த பொருட்களில், 304 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள பொருட்கள் நேரடி DCTS நிவாரணத்தைப் பெற்றவை ஆகும். அதனூடாக, குறித்த காலப்பகுதியில் இலங்கை ஏற்றுமதிகள் DCTS திட்டத்தினால் எவ்வாறு ஊக்குவிக்கப்பட்டது என்பதை தெளிவாக காண முடியும்.

இங்கு DCTS எளிதாக பொருட்களை விநியோகம் செய்யும் திறனில் கவனம் செலுத்தியுள்ளதுடன் சுங்க வரிகளை குறைத்தல், அடிப்படை விதிகளை தளர்த்துதல் மற்றும் வர்த்தக நிலைமைகளை இலகுபடுத்துதல் போன்றவற்றின் மூலம் UK சந்தையில் இலங்கை தயாரிப்புகளுக்கு போட்டியை உருவாக்க முடியும் என அவர்கள் நம்புகின்றனர். DCTS, ஆடை மற்றும் மூலப்பொருட்கள் தொழில்களுக்கு வலுவான ஆதரவை வழங்கியுள்ளது, அவை ஏற்றுமதித் துறையில் முன்னணியில் உள்ளன, அவை திறப்பு விதிகள் மற்றும் நிபந்தனைகளை நெகிழ்வான முறையில் மாற்றுகின்றன. இந்த சமீபத்திய சட்டங்கள் இலங்கை உற்பத்தியாளர்களுக்கு வரிச்சலுகைகளை இழக்காமல் பிற நாடுகளில் இருந்து மூலப்பொருட்களை பெறுவதற்கு உதவியது மற்றும் உலக சந்தையில் போட்டியை உருவாக்கியது.

# "Bestweb.lk – 2024" விருது வழங்கும் நிகழ்வில் வெள்ளி விருதை வென்ற HNB FINANCE



இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB Finance PLC ஆனது BestWeb.lk 2024 விருது வழங்கும் நிகழ்வில் நிதி மற்றும் காப்புறுதி பிரிவின் கீழ் வெள்ளி விருதை வென்றது.

"BestWeb.lk" விருது வழங்கும் நிகழ்வு வருடம் தோறும் நாட்டிலுள்ள சிறந்த இணையத்தளங்களை மதிப்பிடுவதுடன், HNB Finance இன் www.hnbfinance.lk இணையத்தளமும் இம்முறை இவ்வாறு விருதிற்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

LK Domain Registry நிறுவனம் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் இந்த விருது வழங்கும் நிகழ்விற்கான விருதுகளுக்காக இலங்கையில் உள்ள பல முன்னணி நிறுவனங்கள் விண்ணப்பிப்பதுடன் இதற்கு முன்னரும் HNB Finance PLC இன் இணையதளம் மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில், விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்களின் இணையதளங்களை ஆக்கப்பூர்வமாக வழங்குதல், நிறுவனத்தின் சேவைகளை வாடிக்கையாளர்கள் எளிதில் அணுகும் திறன், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற காரணிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

"எங்கள் இணையதளம் எப்போதும் வளர்ந்து வரும் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தளத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், வாடிக்கையாளர்களுக்கு எங்கள் சேவைகளை வழங்குவதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் பாவனையாளர் நட்பு வடிவமைப்பின் எளிமை ஆகியவற்றின் அடிப்படையில் எப்போதும் முன்னணியில் உள்ளது. இவை அனைத்தின் மூலமாகவும், வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் நம்பகமான தரமான சேவையை வழங்குவதே எங்கள் நோக்கம்.

நிதித்துறையில் முன்னணி நிறுவனமாக, சிறந்த வாடிக்கையாளர் சேவையை உரிய விடா முயற்சியுடன் வழங்க உதவும் அனைத்து காரணிகளையும் கருத்தில் கொள்ளும் எங்களது முயற்சி இந்த விருது மூலம் உறுதி செய்யப்படுகிறது.

மேலும் இதுபோன்ற மதிப்பீடுகள் மூலம், நிதித்துறையில் தரம் சார்ந்த உயர் பதவிகளை அடைவதற்குத் தேவையான ஊக்கத்தைப் பெறுவோம் என்று நான் நம்புகிறேன்.” என HNB FINANCEஇன் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் திரு.உதார குணசிங்க தெரிவித்தார்.

# நேரடி வெளிநாட்டு முதலீடு மூலம் இலங்கையின் சாத்தியக்கூறுகள்

அண்மைய வருடங்களில் இலங்கைக்கு ஏராளமான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் (FDI) கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த முதலீடுகளில் ஒரு சில, பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க அத்தியாவசியமானவையாக அமைந்துள்ளன. ஆயினும், மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, துறைமுகங்கள், கல்வி, சுகாதாரம் போன்ற மேலும் சில துறைகளில் இது இன்னும் அதிக தேவையாகும்.

உலக வங்கியின் 2022 ஆம் ஆண்டு அறிக்கைக்கு அமைய, 22.18 மில்லியன் மக்கள் கொண்ட இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 74.4 பில்லியன் டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. எமது நெருங்கிய அண்டை நாடான இந்தியாவுடன் இதை ஒப்பிடுகையில், அது 1.417 பில்லியன் மக்கள் தொகையுடன் 3.417 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுள்ளது.

பாமர மக்களுக்கு இது ஒரு தேவையற்ற கணிப்பீடாகத் தோன்றினாலும், உண்மையில் இது எதை காட்டுகின்றது என்றால், இந்தியா போன்ற நாடுகளில் தன்னிறைவு பெற்ற துறைகளை அடைவதற்கு அவசியமான வளங்கள் காணப்படுகின்றன. சிறியளவிலான GDP இனையும், சிறியளவிலான நிலப்பரப்பையும் கொண்ட இலங்கை போன்ற நாட்டுக்கு இவ்விடயம் ஒரு துரதிர்ஷ்டவசமான நிலையாகும்.

ஆயினும், ஒரு நாடு எனும் வகையில் நாம் வளர்ச்சியடைந்து, அதிக வருமானம் பெறும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது என்று அர்த்தமல்ல.

சிங்கப்பூரை உதாரணமாக எடுத்துக் கொண்டால், 1970 இல் சிங்கப்பூரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.92 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதேவேளை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.30 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

இன்று சிங்கப்பூர் மொத்த உள்நாட்டு உற்பத்தியாக 466.8 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்டுள்ளது. இது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 6 மடங்கு அதிகமாகும். அந்நாட்டின் தனிநபர் வருமானமானது, உலகிலுள்ள மிக உயர்ந்த நாடுகளின் பட்டியலில் இடம்பிடிக்கிறது.

# போலி உதிரிப் பாகங்கள்; எதிர்த்து போராட இணைந்த CMTA, சுதத் பெரேரா அசோசியேட்ஸ்



தெற்காசியாவின் மிக சிரேஷ்ட வாகன சங்கமான சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் (CMTA) மற்றும் புலமைச் சொத்துரிமைகளில் நிபுணத்துவம் பெற்ற இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற சட்ட நிறுவனங்களில் ஒன்றான சுதத் பெரேரா அசோசியேட்ஸ் ஆகியன இணைந்து, நாட்டில் அதிகரித்து வரும் போலியான உதிரிப் பாகங்களின் சந்தை தொடர்பில், CMTA உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடொன்றை அண்மையில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் முன்னெடுத்திருந்தது.

இந்த நிகழ்வின்போது, CMTA உறுப்பினர்களுக்கு பெறுமதி வாய்ந்த தகவல்களையும், போலித் தயாரிப்புகளின் பரவலை எதிர்த்துப் போராடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான விளக்கத்தையும் சுதத் பெரேரா அசோசியேட்ஸ் வழங்கியிருந்தது. நுகர்வோரையும், பொருளாதாரத்தையும் பாதுகாக்க, இத்தொழில்துறையில் உள்ள பங்குதாரர்களுக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

போலியான உதிரிப் பாகங்கள் அடையாளம் காண்பதற்கு கடினமாகும். ஏனெனில் அவை அசல் பாகங்கள் போன்றதாக பிரதி செய்யப்பட்ட வணிக இலச்சினைகளுடனும் பொதியிடலுடனும் வருகின்றன. வாகனங்கள், ட்ரக்குகள், மோட்டார் சைக்கிள்களுக்கான பிரேக் பேட்கள் போன்ற பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாகங்களில் இது முக்கியத்துவம் வாய்ந்த சிக்கலாக அமைகின்றது. பெரும்பாலும், இந்த போலி உதிரிப் பாகங்கள் உரிய பாதுகாப்பு தரத்தை பூர்த்தி செய்வதில்லை. இதன் காரணமாக நுகர்வோர் மற்றும் வீதியில் பயணிக்கும் பயணிகளுக்கு ஆபத்தான நிலை உருவாகிறது.

# முக்கிய பங்குடைமையில் இணையும் SDB வங்கி மற்றும் USAID அமைப்பு



இலங்கை வங்கியியல் துறையின் பொருளாதார, சமூக, ஆட்சி நிலைபேணலில் நன்கறியப்பட்ட தலைமையான SDB வங்கியானது USAID காலநிலைத் தழுவல் செயற்றிட்டத்தினை இலங்கையில் அமுல்படுத்துவதற்காக சர்வதேச அபிவிருத்திகளுக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்துடனான (USAID) அதனது முக்கியத்துவம்வாய்ந்த பங்குடைமை குறித்து பெருமையுடன் அறிவிக்கின்றது. இக்கூட்டாண்மையானது நாட்டில் காலநிலை நெகிழ்திறன் மற்றும் நிலைபேறான வளர்சியை வளர்த்தலினை மையப்படுத்துகின்றது.

USAID ஆனது Tetra Tech ARD எனும் காலநிலைத் தழுவலிற்கான அதன் பிரதான ஒப்பந்ததாரருடனான தொடர்புடன், காலநிலை மாற்றத்திற்கு வினைத்திறனாக எதிர்வினையாற்றவும் தழுவவுமாக தனியார் துறை, சிவில் சமூம், மற்றும் அரசாங்கத்தின் கொள்தகைமைகளை வலுப்படுத்த நோக்கங்கொண்டுள்ளது. இச்செயற்றிட்டமானது விவசாயம், மீன்பிடி, மற்றும் சுற்றுலா எனும் மூன்று முக்கிய துறைகளினை கவனத்துக்குட்படுத்தி நிலைபேறாக்கப்பட்ட, உள்ளடக்கிய, சந்தையை வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

USAID உடனான SDB வங்கியின் கூட்டாண்மையானது காலநிலைத் தழுவல் இடையீடுகளினை, குறிப்பாக காலநிலை நெகழ்திறனிற்கு பங்களிக்கும் வகையில் நிதி மற்றும் வளங்களை ஒன்றுதிரட்டலினை, தழுவிக்கொள்ளவும் அளவிடவும் வசதியளிக்கின்றது.

# இலங்கையில் இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகளை மேம்படுத்த இணைந்த Hemas மற்றும் SLIIT




நாட்டின் சுகாதார பராமரிப்பு கல்வியை சர்வதேச நியமங்களுக்கு கொண்டு செல்லும் நோக்குடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்துடன் (SLIIT) இணைந்த கல்வி ஸ்தாபனத்தை நிறுவ ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி முன்வந்துள்ளது. புத்தாக்கமான தாதியியல் மற்றும் இணைந்த சுகாதார பராமரிப்பு கல்வியை SLIITHEMAS Allied Health Sciences Institute (SHAHSI)எனும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பினூடாக பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் புதிதாக ஆட்சேர்ப்புக்கு முன்வந்துள்ள இந்த நிறுவனத்தில் 300க்கும் அதிகமான மாணவர்கள் இணைய முன்வந்துள்ளதுடன், மேலும் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர்.

தனியார் சுகாதார பராமரிப்பு வழங்கலில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் கொண்டுள்ள ஆழமான அனுபவத்துடன், SLIIT இன் புகழ்பெற்ற தரமான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கான கீர்த்தி நாமத்துடன் அமைந்த இந்த பங்காண்மையினூடாக, சர்வதேச ரீதியில் தொழில்புரியக்கூடிய இணைந்த சுகாதார பராமரிப்பு நிபுணர்களுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான பரிபூரண கற்கைகளை வழங்குகின்றது. நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் காணப்படும் திறன் படைத்த சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முக்கிய படியாக இந்த கைகோர்ப்பு அமைந்திருக்கும்.

தாதியர் மற்றும் சுகாதார பராமரிப்பு நிபுணர்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் பங்காண்மையினூடாக துரித கல்வி வழங்கப்படவுள்ளதுடன், முன்னணி விரிவுரையாளர்கள் மற்றும் நிபுணர்களை இணைத்து மாணவர்களுக்கு கல்வியறிவூட்டவும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தினூடாக வழமையான கல்விசார் கைகோர்ப்புகளுக்கு அப்பால் சென்று, தனது பரிபூரண தொழிற்துறை வெளிப்படுத்தல் மற்றும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும். தற்போதைய கற்கைகள், அவுஸ்திரேலியாவின் Deakin University மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் Liverpool John Moores University ஆகியவற்றுடன் இணைந்ததாக அமைந்திருக்கும். மேலும், தாதியியல் கற்கைகள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) NVQ நிலை 6 சான்றிதழை வழங்குவதாக அமைந்திருக்கும்.

# சிறந்த விநியோக கூட்டாண்மை அங்கீகாரம் பெற்ற Solar Booze



இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னணி நாமமாகத் திகழ்ந்து வருகின்ற Solar Booze (Private) Limited நிறுவனமானது, இலங்கையில் Huawei Inverter களுக்கான அங்கீகரிக்கப்பட்ட விநியோக கூட்டாளராக ஆற்றியுள்ள அதன் மிகச் சிறப்பான ஒத்துழைப்புக்காக Huawei Fusion Solar நிறுவனத்தால் கௌரவிக்கப்பட்டுள்ளது. நிலைபேணத்தக்க எதிர்காலத்தின் மீது நாட்டின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டியவாறு, சூரிய மின்வலு உற்பத்தி ஆற்றலில் 1GW இனை இலங்கை எட்டியுள்ள மகத்தான சாதனையைக் கொண்டாடும் வகையில், அண்மையில் கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம்பெற்ற ‘Watt a Milestone’ என்ற விசேட வைபவத்தின் போது Solar Booze நிறுவனத்துக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி நதீகா ஹேரத் அவர்கள் இச்சாதனை குறித்து கருத்து வெளியிடுகையில், “உலகப் பிரசித்தி பெற்ற Huawei போன்ற Fortune 500 வர்த்தகநாமம் ஒன்றின் புரட்சிகரமான விநியோகத்தராகச் செயற்பட்டு, இலங்கையில் நிலைபேணத்தக்க எதிர்காலத்தை நோக்கிய மாற்றத்திற்கான பயணத்தில் அங்கம் வகிப்பதையிட்டு Solar Booze நிறுவனம் மிகவும் கௌரவம் அடைந்துள்ளது. இலங்கையிலுள்ள மிகவும் நம்பிக்கைக்குரிய சூரிய மின்வலு உபகரண வழங்குனராக, நேர்மையுடன் செயற்பட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு தரமான தயாரிப்புக்களையும், மகத்தான சேவைகளையும் வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கம்,” என்று குறிப்பிட்டார்.

# சுரஞ்சனியை நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளராக உள்வாங்கிய சர்வோதய



சர்வோதய டெவலெப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி, 2024 ஒகஸ்ட் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் திருமதி சுரஞ்சனி விக்ரமரட்ணவை நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீன பணிப்பாளராக நியமித்துள்ளமை குறித்து மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் பணிப்புரை இலக்கம் 06 இன் நிதி வணிகச் சட்டமூலம் (முக்கிய பொறுப்புள்ள நபர்களின் தகைமை மற்றும் சொத்து குறித்த மதிப்பீடு) 3.2 க்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியிடமிருந்து இந்த நியமனத்திற்கு தேவையான அனைத்து அங்கீகாரங்களும் பெறப்பட்டுள்ளார். இலங்கையின் முன்னணி, அபிவிருத்தி நிதிநிறுவனமான சர்வோதய டெவலெப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி, விவசாயத் துறையில் கவனம் செலுத்தியுள்ளதோடு, வசதிகள் குறைந்த கிராம மற்றும் நகர்ப்புற சமூகங்களுக்கு ஆதரவளித்து வருகின்றது. சுரஞ்சனி விக்ரமரட்ணவை SDF நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு ஆழமான அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் கொண்டு வந்துள்ளார். அவரது தொழில்சார் பின்னணியைப் பொறுத்தவரை வங்கி மற்றும் கணக்காய்வுத் துறையில் கணிசமான பங்களிப்பாற்றியுள்ளார்.

அவர் 1995 முதல் 2009 வரை டொயிஷ் வங்கியின் கொழும்புக் கிளையின் கணக்காய்வுத்துறை தலைமை அதிகாரியாக கடமையாற்றியுள்ளதுடன், செயல்பாட்டு கணக்காய்வுகள் மற்றும் பல்வேறு நாடுகளில் பிராந்திய மற்றும் சர்வதேச தொழிற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார். அவர் தனது ஆரம்ப தொழில்வாழ்வில் பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நிதியத்தில் கணக்காளர் மற்றும் நிர்வாக முகாமையாளராகவும், ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் சிரேஷ்ட கணக்காய்வாளராகவும் கடமையாற்றியுள்ளதுடன், முகாமைத்துவ மற்றும் நிதியியல் கண்காய்வுகளில் கணிசமான அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

கல்வி ரீதியாக சுரஞ்சனி விக்ரமரட்ணவை ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். அத்துடன் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் கற்கைநிலையத்தின் இணை அங்கத்தவரும் (ACMA) ஆவார். கொழும்பு 7 புனித பிரிட்ஜட் கன்னியர் மடத்தின் பழைய மாணவியான அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார்.

# இலங்கை அணி 2ஆவது இன்னிங்ஸில் 202 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது

## ஜனாதிபதி தேர்தல் காரணமாக இன்று ஓய்வு நாள்



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்கு துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி மேலும் 6 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 202 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் நேற்று மூன்றாவது நாள் நிறைவடைந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால், இன்றைய (21) தினம் ஓய்வு நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நாளைய தினத்திலேயே நான்காம் நாள் ஆட்டம் தொடரவுள்ளது.

இதில் நியூசிலாந்து அணி நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்தபோதும் இலங்கை பந்துவீச்சாளர்கள் நெருக்கடி கொடுத்தனர். இதனால் அந்த அணி முதல் இன்னிங்ஸில் 90.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 340 ஓட்டங்களை பெற்றது.

பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு ரமேஷ் மெண்டிஸ் 3 விக்கெட்டுகளைப் பதம்பார்த்தார்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 305 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 35 ஓட்டங்களால் பின் தங்கியே நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. பத்தும் நிசங்க 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தபோதும் திமுத் கருணாரத்ன மற்றும் தினேஷ் சந்திமால் சிறப்பாக செயற்பட்டு முதல் விக்கெட்டுக்கு 147 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டனர்.

இதன்போது திமுத் 127 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 83 ஓட்டங்களைப் பெற்றதோடு சந்திமால் 150 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 61 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன்மூலம் இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 72 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அஞ்சலோ மத்தியூஸ் 32 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இலங்கை அணியிடம் இன்னும் ஆறு விக்கெட்டுகள் கைவசம் இருக்கும் நிலையில் நியூசிலாந்து அணிக்கு சவாலான வெற்றி இலக்கு ஒன்றை நிர்ணயிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## டி20 உலகக் கிண்ணத்திற்கான இலங்கை மகளிர் குழாம் தேர்வு

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான இலங்கை 15 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கைக் குழாத்துக்கு விளையாட்டுத் துறை அமைச்சு ஒப்புதல் அளித்ததாக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 3 தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்காக இலங்கை அணி எதிர்வரும் செப்டெம்பர் 23 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணிக்கவுள்ளது. இலங்கைக் குழாம்: சமரி அத்தபத்து (தலைவி), ஹர்ஷிதா சமரவிக்ரம, விஷ்மி குணரத்ன, கவிஷா டில்ஹாரி, நிலக்ஷி டி சில்வா, ஹாசினி பெரேரா, அனுஷ்கா சஞ்சீவனி, சச்சினி நிசன்சலா, உதேஷிகா பிரபோதனி, இனோஷி பெர்னாண்டோ, அச்சினி குலசூரிய, இனோகா ரணவீர, ஷஷினி கிம்ஹானி, அமா கான்சனா, சுகந்திகா குமாரி.



## பல்கலைக்கழக கூடைப்பந்தில் சம்பியனானது யாழ். பல்கலை



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை எதிர்கொண்ட யாழ். பல்கலைக்கழகம் 44–47 புள்ளிகளில் வெற்றியீட்டியது. இதேவேளை பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியிலும் யாழ். பல்கலைக்கழக வீராங்கனைகள் இறுதிப் போட்டி வரை முன்னேறினர். எனினும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு எதிரான இறுதிப் போட்டியில் அந்த அணி 38–48 என்ற புள்ளி அடிப்படையில் தோல்வியை சந்தித்தது.



# சர்வதேச செய்திகள்

## பேஜர், வோக்கி டோக்கி வெடிப்பை அடுத்து

# லெபனானில் இஸ்ரேலிய போர் விமானங்கள் சரமாரி தாக்குதல்

காசா போரை ஒட்டி சுமார் கடந்த ஓர் ஆண்டாக நீடிக்கும் லெபனான் ஹிஸ்புல்லா அமைப்புடனான பதற்றத்தில் இஸ்ரேல் இராணுவம் இதுவரை இல்லாத அளவுக்கு தெற்கு லெபனான் மீது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகள் இரு தரப்பையும் அமைதி காக்கும்படி வலியுறுத்தியபோதும் முழு அளவில் போர் ஒன்று வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இராஜதந்திர தீர்வொன்றை எட்ட முடியும் என்று வெள்ளை மாளிகை வலியுறுத்தியுள்ளது. இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே உடன் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட வேண்டும் என்று பிரிட்டன் குறிப்பிட்டுள்ளது. இந்த மோதல் தீவிரம் அடைவது குறித்து வெள்ளை மாளிகை பேச்சாளர் கரின் ஜீன் கவலை வெளியிட்டுள்ளார்.

லெபனான் ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பேஜர் மற்றும் வோக்கி டோக்கி சாதனங்கள் வெடித்து 37 பேர் கொல்லப்பட்டு 3000 பேர் வரை காயமடைந்த சம்பவத்திற்குப் பின்னரே இஸ்ரேலின் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல்களில், போர் விமானங்கள் இரண்டு மணி நேரத்தில் தெற்கு லெபனானில் நிலைநிறுத்தப்பட்டிருந்த பல ரொக்கெட் ஏவு தளங்களை இலக்கு வைத்ததாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இந்த ரொக்கெட்டுகள் இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுக்க தயாராக இருந்தவை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி இரவு 9 மணிக்குப் பின்னர் தெற்கு லெபனானில் 52க்கும் அதிகமான தாக்குதல்கள் இடம்பெற்றதாக லெபனான் அரச செய்தி நிறுவனமான என்.என்.ஏ. தெரிவித்தது. கடந்த ஒக்டோபரில் மோதல் ஆரம்பித்தது தொடக்கம் இடம்பெற்ற கடுமையான வான் தாக்குதல்களாக இது இருந்தது என்று லெபனான் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் உடன் விபரம் வெளியாகவில்லை.

ஹிஸ்புல்லா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாக உறுதி அளித்திருக்கும் இஸ்ரேல், தெற்கு லெபனானில் சுமார் 100 ரொக்கெட் ஏவு தளங்கள் மற்றும் ஏனைய இலக்குகள் மீது வியாழக்கிழமை முழுவதும் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவித்துள்ளது.



கடந்த வியாழனன்னு தொலைக் காட்சியில் உரையாற்றிய ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்ல, கடந்த செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் பேஜர்கள் மற்றும் வோக்கி டோக்கிகளின் வெடிப்புகள் 'அனைத்து சிவப்புக் கோட்டையும் தாண்டுவதாக உள்ளது' என்று எச்சரித்தார். 'எதிரிகள் கட்டுப்பாடுகள், சட்டங்கள் மற்றும் விழுமியங்கள் அனைத்தையும் மீறுவதற்கு விரும்புகிறது. இது ஒரு போர் குற்றமாக அல்லது போர் பிரகடனமாக கருதப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொலைத்தொடர்பு சாதனங்களின் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் இஸ்ரேல் நேரடியாக எந்தக் கருத்தும் அளிக்காதபோதும் இதனை இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவு செய்திருப்பதாக பாதுகாப்பு தப்பினர் குற்றம்சாட்டுகின்றனர்.

ஐ.நாவுக்கான லெபனான் தூதரகம் கடந்த வியாழக்கிழமை பாதுகாப்புச் சபைக்கு எழுதிய கடிதத்தில், இந்த சாதனங்கள் லெபனானுக்கு கொண்டுவரப்படும் முன் அதில் வெடிபொருள் பொருத்தப்பட்டு மின்னணு செய்திகள் வழியாக வெடிக்கச் செய்யப்பட்டதற்கு இஸ்ரேலே பொறுப்பாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வெடிப்புகள் தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று அவசரக் கூட்டத்தை நடத்தியது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மற்றும் தொழில்நுட்பப் போருக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கும்படி லெபனான் பிரதமர் நஜீப் மிகாதி பாதுகாப்புச் சபைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நஸ்ரல்லாவின் தொலைக்காட்சி உரை இடம்பெறும் வேளையில் இஸ்ரேலிய போர் விமானங்கள் பெய்ரூட் நகர வானில் பெரும் சத்தத்துடன் வட்டமிட்டன. இது அண்மைய மாதங்களில் வழக்கமான ஒன்றாக மாறியபோதும் தற்போது முழு அளவில் போர் ஒன்றுக்கான அச்சுறுத்தலாக உள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு எதிராக தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் குறிப்பிட்டுள்ளார்.

'போரின் இந்தப் புதிய கட்டம் குறிப்பிடத்தக்க வாய்ப்பாக இருந்தபோதும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாகவும் உள்ளது. தொடரும் இராணுவ நடவடிக்கைகள் துன்புறுத்தலாக அமையும் என்பதை ஹிஸ்புல்லா உணர்ந்திருக்கும்' என்று கல்லன்ட் கடந்த வியாழனன்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆலோசனை பெறுவதற்காக தமக்கு நெருக்கமான அமைச்சர்களை கூட்டி இருப்பதாக இஸ்ரேலின் 'சென்னர் 13' தொலைக்காட்சி நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

## இஸ்ரேலியப் படையினரின் கொடிய செயலால் பரபரப்பு



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான கபாத்தியாவில் இஸ்ரேலியப் படை கடந்த வியாழக்கிழமை (19) நடத்திய சுற்றிவளைப்பில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் உடல்களை இஸ்ரேலியப் படை கூரை மேல் இருந்து தள்ளிவிடும் வீடியோக் காட்சிகள் இணையத்தில் வெளியாகி இருப்பதோடு அதனை அல் ஜசீரா செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது.

இஸ்ரேலியப் படையின் இந்த சுற்றிவளைப்பில் குறைந்தது எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இதன்போது அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மொட்டை மாடியில் இருந்து கை, கால்கள் மற்றும் கண்கள் கட்டுப்பட்ட ஒருவரை இஸ்ரேலியப் படையில் காலால் தள்ளி கீழே வீசி எறிவது வீடியோவில் பதிவாகியுள்ளது. இதனை ஒரு குற்றச் செயல் என்றும் இஸ்ரேலிய இராணுவத்தின் கொடூரம் என்றும் பலஸ்தீன வெளியுறவு அமைச்சு எக்ஸ் சமூகத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், 'இது (இஸ்ரேல் இராணுத்தின்) பெறுமானங்கள் மற்றும் (இஸ்ரேல் இராணுவ) படையினரிடம் எதிர்பார்க்கப்படுவதற்கு மாறான ஒரு தீவிர செயல்' என்று குறிப்பிட்டுள்ளது.

## காசாவில் எகிப்து எல்லையை நோக்கி இஸ்ரேலியப் படையினர் முன்னேற்றம்




காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் வடக்கு மற்றும் மத்திய காசாவில் டாங்கி மற்றும் வான் தாக்குதல்களில் நேற்று (20) குறைந்தது 14 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இஸ்ரேலின் டாங்கிகள் எகிப்து எல்லையை நோக்கி வட மேற்கு ரபாவில் மேலும் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் இஸ்ரேலிய டாங்கிகள் நடத்திய செல் குண்டு தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்கு நகரான ரபாவில் இஸ்ரேல் கடந்த மே மாதம் தொடக்கம் படை நடவடிக்கையை மேற்கொண்டு வரும் நிலையில் அங்கு வான் தாக்குதல்களின் உதவியோடு டாங்கிகள் மேலும் வடமேற்காக முன்னேறி வருவதாக குறியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நகரின் கிழக்கு பகுதியில் கடும் சூடு மற்றும் குண்டு வெடிப்புகள் இடம்பெறுவதோடு இஸ்ரேலியப் படைகள் பல வீடுகளையும் குண்டு வைத்து தகர்த்து வருவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். காசாவில் கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் இஸ்ரேல் நடத்தி வரும் தொடர்ச்சியான தாக்குதல்களில் இதுவரை 41,200க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய – சீன அமைதிக்கு இணக்கம்



இரு தரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் நெறிமுறைகளின்படி எல்லைப் பகுதிகளில் அமைதியையும் சமாதானத்தையும் கூட்டாக நிலைநிறுத்த இந்தியா மற்றும் சீனா இணக்கம் கண்டுள்ளன.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான செயற்பாட்டு கட்டமைப்பின் 31ஆவது கூட்டம் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பேர்லினுக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லைத் தகராறு தொடர்பான பிரச்சினைகளில் 75 வீதமானவை தீர்க்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 21ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.